


Tamil Comics Ulagam - King Viswa



திடீர்துரோகி!
குளிர்கால இலண்டன் இரவு-S.I.6. உளவுப் பிரிவின் விசேட ஏஜெண்ட்களான ஜார்ஜும், டிரேக்கும் ஒரு பிச்சைக்காரனை பின்பற்றி வந்து கொண்டிருந்தனர்-
தலைவருக்கு தகவல் சொல்லி விடுகிறேன்!
அருமையான வேஷத்தில் இருக்கிறான் பயல்! சத்தியமாக இவனை அந்நிய உளவாளி என்று யாராலும் இனம் காண முடியாது! தலைவருக்கு துப்பு கிடைத்ததால் நம்மால் இவனை கண்டுபிடிக்க முடிந்துள்ளது-
S.I.6. தலைமையகத்தில் ஜார்ஜ் அனுப்பிய செய்தியை பெற்றுக் காண்டார், தலைவரான கர்னல் ஹெண்டர்!
உத்தரவுகளின் படி பின் தொடர்ந்து வந்து விட்டோம் சார்! இனி என்ன?
உடனடியாக அவனை கைது செய்யுங்கள்! நொடியில் நான் அங்கே வருகிறேன்!
அசைந்தால் தொலைந்தாய்! நாங்கள் S.I.6. ஐ சார்ந்தவர்கள்!
அவனிடம் ஏதேனும் ஆயுதம் உள்ளதா என்று சோதனையிட போகிறேன் டிரேக்!
பசங்களா- வாருங்கள்!
யாஹூ!




F-1


ஹேய்-யார்! நீங்கள்!
காலிப் பசங்கள்!
ஹா-ஹா-எங்கள் பேட்டையில் நுழைந்து வாலாட்டுகிறீர்களா? தொலைத்து விடுவோம்-தொலைத்து!
நேராக நம்மை நோக்கித் தான் வருகிறார்கள்!
ஜார்ஜ்-இந்தப் பழைய எண்ணெய் பீப்பாய்களை பயன் படுத்துவோமா?
நசுக்குங்கள்!
ஹேய்-மோட்டார் சைக்கிளிலிருந்த ஒரு ரௌடியை அடித்துப் போட்டு விட்டு அந்த உள-வாளி கிளம்பி விட்டான்!
உருட்டி விடு!
ஆஆவ்!
யாாா...
விடக் கூடாது அவனை!
அவன் செய்ததை நாமும் செய்-வோம்! வா!
அத்தனை எளிதில் நம்மிடமிருந்து தப்பிவிட முடியாது!
அதோ, அந்த ரெயில்வே கேட் டருகே போகிறான்!


அடச் சே! சரக்கு வண்டி நடுவில் வந்து காரியத்தை கொடுத்து விட்டதே!
கொஞ்சம் பொறு டிரேக்! எனக்கு ஒரு ஐடியா- வண்டி மிகவும் மெதுவாகத்தான் செல்கிறது—
ஆகையால் இந்த களிமண் குவிப் பைப் பயன்படுத்தி-
சர்க்கஸ் வேலை செய்யலாம் என் கிறாயா? அதுவும் நல்ல யோசனை தான்!
நேராக மறு பக்கத்திற்கு வந்து விட் டோம்!
நம் ஸ்டண்ட் பயிற் சிகள் வீணாகவில்லை!
குறிப்பு! ஜார்ஜும், டிரேக் கும் 'வேட்டையர்' எனும் டெலிவிஷன் தொடரில் நடிக்கும் ஸ்டண்ட் வீரர்கள்!
இப்பொழுது பிடித்து விடலாம்!
எதிரே வரும் கார்- தலைவருடைய தல்லவா?
அ-அதை மோதச் செய்து விட்டானே!



உயிரோடு இருக்க நினைத்தால், நான் சொல்கின்ற படி செய்! ஊம்-கீழே இறங்கி வா!
த-தலைவரை கைதியாக்கி விட்டான்!
தொடர்ந்து வந்தீர்களோ-இந்த வழுக்கைத் தலையன் க்ளோஸ்!
வசமாய் பிடி கிடைத்து விட்டது பயலுக்கு!
இந்த முறை ஆரம்பத்திலிருந்தே வேலையில் தடங்கல்கள் வந்து கொண்டிருக்கின்றன-
கட்டிடத்தின் மறுபக்கத்திலிருந்து ஏதாவது செய்ய முடிகிறதா என்று பார்ப்போம்! நல்லதொரு ஜேம்ஸ்பாண்டைப்போல சில பயனுள்ள கருவிகளைக் கொண்டு வந்துள்ளேன்!
அந்தப் பயல் இந்த முயற்சியை எதிர்பார்த்திருக்கவே மாட்டான்!
கொக்கி முனை கொண்ட கயிற்றைச் சுடும் துப்பாக்கி அவற்றுள் ஒன்று!
நீ முதலில் போ டிரேக்!
நான் சொன்னதை செய்து முடிப்பவன்!
மாடியை அடைந்தனர்-
மாட்டி விட்டாய்! உயிர் மேல் ஆசை இருந்தால் கர்னலை விடுவித்து விடு!
துப்பாக்கியை போட்டுவிட்டு சரணடைந்து விடு!
ஆ! ஆ!


ண்டவனே! இத்தனை பெரிய வறியனாக இவன் இருப்பான் என்று நான் எதிர்பார்க்வேயில்லை சார்!
என் கதை முடிந்தது! அவனையாவது பிடி-யுங்கள்! இது தான் என் கடைசி உத்தரவு!
அதோ போகிறான் நாச காரன்!
ஹா! ஹா! ாலம் உடைஞ்சு போச்சு கண்-ணுகளா!
அடச் சே! பலகையை தட்டி விட்டானே!
அதனாலென்ன? இந்தக் கம்பிகளின் மீது நம் சட்டைகளைப் போட்டு தாண்டி விடலாம்!
தலைவரின் மரணத்திற்கு அவன் பதில் சொல்லியே தீர வேண்டும்!
ஆனால் கீழே மட்டும் பார்த்து விடாதே!
ச்சே! ரவைகள் தீர்ந்து விட்டன!
வசமாய் சிக்கி விட்டாய் அப்பனே!
அப்படியா நினைக்கிறாய் நீ? இதற்கென்ன பதில் சொல்கிறாய்?
ஹே-ஹேய் விழுந்து செத்துத் தொலைந்து விடாதே!



பைத்தியக்காரன்! தன்னைத் தானே மாய்த்துக் கொள்ளப் போகிறான்!
ஆனால்-
கீழ்மட்ட ஜன்னல் விளிம்பொன்றைப் பற்றி, வேகத்தை மட்டுப் படுத்திக் கொண்டுள்ளான்!
சரியான குள்ள நரிப் பயல்!
பின்னர் நிதானமாய் தரையிறங்கி சாலையில் சென்ற ஒரு டவுண் பஸ்ஸினுள் பாய்ந்தான் அந்தப் பயங்கரவாதி!
போச்சுடா! புதுத் தொல்லையா?
பஸ்ஸைக் கைப்பற்றி விட்டான்!
ஒய்வு ஒளிச்சல் இல்லாமல் நம்மை இந்தமாதிரி புரட்டி எடுக்கிறானே! அது சரி-வண்டி எங்கே போகிறது?
பொறுத்திருந்து பார் தெரியும்!
விரைவில்!
துறைமுகப் பகுதிக்கு வந்து விட்டோம்! ஏதாவது கப்பலில் தப்பலாம் என்று நினைப்போ!
அங்கே பார்! துப்பாக்கியுடன் அவனது சகாக்கள்!
நம்மைப் பார்த்து விட்டார்கள்! தொலைந்தோம்!
பஸ்ஸின் மேல் பார்-அந்நியர்கள்! சுட்டுத் தள்ளுங்கள்!
இந்த முயற்சி வெற்றி பெறுமா என்று பார்ப்போம்!
கரணம் தப்பினால் மரணம்தான்!



இந்தாருங்கள்-- எங்கள் பதில்!
ஆ ஆ!
ஹா— ஆஹ்!
எதிரி மீது பாய்ந் தான் ஜார்ஜ்-
இம்முறை தப்ப வழியே கிடையாது மிஸ்டர்!
ஓ கே! ஓ கே! சரணடைகிறேன்!
மறுகணம்-
ஹா! ஹா! ஹா!
ஹஹ்! நீ ஜிம் அல்லவா?
S.I.6. ன் சக ஏஜெண்ட் நீ-
இதற்கெல்லாம் என்ன அர்த்தம்!
பயப்படாதே டிரேக்! இன்றைய நாடகத்திற்கு அனைத்து நடிகர்களுக்கும் உங்களுக்கும் உட்படத்தான்! S.I.6.ல் பணியாற்ற இன்னமும் நீங்கள் தகுதி வாய்ந்தவர்கள் தான் என்பது இன்று ஊர்ஜிதமாகி விட்டது!
நன்றாக ஏமாந்து போனீர்கள், இல்லையா? எல்லாமே உங்களுக்கு ஒரு சோதனை! பைக் ரௌடிகள், பஸ் விரட்டு, கடத்தல், துப்பாக்கிச் சண்டை-எல்லாமே உங்கள் திறமையை பரிசோதிக்க நடத்தப்பட்ட, திட்டமிட்ட நாடகம்
ஆ-ஆனால் த-தலைவரை சுட்டுவிட்டா அல்லவா?
ஆனால் திடீரென ஒரு திடுக்கிட வைக்கும் திருப்பம்—
அசையாதே ஹண்டர்! இதில் அசல் தோட்டாக்கள் உள்ளன! உன்னை தொலைக்கப் போகிறேன்!
பீ-பீட்டர் எ-என்ன வாயிற்று உனக்கு


ஊஊம்-முதலில் நீங்கள் எல்லாரும் தண்ணீருக்குள் குதியுங்கள்! தப்பி ஓட முடியாமல் திண்டாடுங்கள்!
தண்ணீருக்குள் பாய்வதற்குப் பதிலாக இப்படிச் செய்கிறேனே பீட்டர்!
உனக்கு புத்தி பேதலித்து விட்டதா பீட்டர்?
ஓ. கே! நீ எங்கே பாய்ந்தாலும் கிடைக்கப் போவது மரணமே!
குறி தப்பி விட்டது! இதுதான் சமயம்!
ஆ ஆ ஆ!
டிரக்கின் முன் முனைகளுக்கு மத்தியில் மாட்டி விட்டால் உன் ஆட்டம் குளோஸ்!
ஹ்ம்ம்-சமீபத்தில் தான் S.I.6. ல் சேர்ந்தார், இந்தப் பீட்டர்! என்னைக் கொல்வதற்காகவே நம் எதிரிகள் இவனை அனுப்பியிருக்கிறார்கள் போலும்!
நம் அனைவருக்குமே இது ஒரு கசப்பான பாடம்! S.I.6.ன் ஏஜெண்டுகளாக இருக்கும் எவரும் ஒரு கணம் கூட அசட்டையாக இருக்கலாம்!
இவனும் தன் கைவரிசையை இன்று காட்டுவதென தீர்மானித்து விட்டான்-ஏனெனில் நம் அனைவரிடமும் எதிர்த்துத் தாக்குவதற்கு அசல் குண்டுகள் இன்று இருக்காது என்பதை தெரிந்து வைத்திருந்தான்!
முற்றும்.



மரண
இயந்திரம்
ஹைட் பார்க் எதிரே இருந்தது அந்த மாளிகை...
அந்தப் பெண்ணுக்கு வசதிகள் ஏராளம்...ப்ரேஸர்!
நம் குறிப்பேட்டின்படி இவள் சொத்து மில்லியன் பவுண்டுகள் தேறும்!
ஆனால்கடந்தகாலவாழ்க்கை மெச்சும்படியானதல்ல!
யாரது?
மிஸ் மாடஸ்டி பிளைஸியா என் பெயர்-டார்ரண்ட்' உன்னோடு கொஞ்சம பேச வேண்டும்!
எதைப்பற்றி...?
ம்ம் ..கொலை சம்பந்தப் பட்ட விஷயம்!


பேசுவோமே... கொஞ்சம் பொறுங்கள் ஸர்ஜெரால்டு!
நாங்கள் இடைஞ்சலாக வந்து விட்டோமோ?
அப்படியெல்லாம் இல்லை.. ஏற்கனவே இவர் கிளம்பிக் கொண்டிருந்தார்...!
வெளியுறவு அலுவலகத்தில் பின்னணியிலேயே இருப்பவனான் இருந்தும் என் பெயரை உனக்குத்தெரிந்திருக்கிறது— ஆச்சரியம்தான்!
சாதாரண நபராக காட்டிக் கொள்ளும் உங்கள் யுக்தி என்னிடம் பலிக்காது.ஸார்!
...அந்நாட்களில் உங்களைப் போன்றவர்களை தெரிந்துவைத்துக் கொள்ள வேண்டிய அவசியம் இருந்தது!
வாஸ்தவம்தான்! ஆனால் நாம் நேரடியாக மோதிக்
ஏதோ கொலை பற்றி பேச
நிரந்தரமாக இங்கிலாந்தில் தங்கி விட தீர்மானித்தபின் உங்களுடைய
விரும்பவில்லை நான்!
ஆமாம்...! ஆனால் அதை


...ில்...?
இது...!
என்னைப் பற்றிய குறிப்பேடு? எல்லா பெரிய நாடுகளும் வைத்துக்கொண்டிருக்கின்றன. 'முடிந்தது' என்று குறிப்பெழுதி தூககிஎறியுங்கள் அதை... பருக என்னகொண்டு வர சொல்லுங்கள்
எங்களுடைய கணிப்பின் படி .. உன் வயது- 26 உயரம் 5' 6''.எடை 120 பவுண்டு கேசம்- கருப்பு-
என் உடலமைப்பை சோதித்தறியவா இங்கே வந்திருக்கிறீர்கள்...மிஸ்டர் ஃப்ரேஸர்?
சே...சே... அப்படியெல்லாம் இல்லை....வந்து—
தன் புலனாய்வு அறிக்கையை அவர் தொடர்ந்து படிக்கட்டும் எங்களுடைய வருகையோடு சம்பந்தப்பட்ட ஒரு பகுதி பின்னால் வருகிறது...
மாடஸ்டி பிளைஸி— நாடற்றவள்... திருமண உறவுகாரணமாகதற்சமயம் இங்கிலாந்தில் இருக்கிறாள்... 1953 லிருந்து குறிப்பு உள்ளது.நிர்வகித்து வந்தசூதாட்ட அரங்கு அதன் உரிமையாளர் இறந்ததும் சொந்தமாகி.விடுகிறது.'நெட் ஒர்க்' என்ற பெயரில் சமூக விரோதகும்பல் உருவாகி வலுவடைகிறது—செயல் திட்டம்:- கள்ள நோட்டு,தங்கம் கடத்தல், உளவு வேலை இப்படியாக...



கும்பலின் இயக்கத்தை நிர்வகிக்க வட, தென் அமெரிக்கா, ஐரோப்பா மத்திய தொலைதூர கிழக்கு நாடு களில பயணம், அவளைக்கொல்ல மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் நான்கு...
ஐந்தா? ...நன்றி மிஸ் பிளைஸி!
ஐந்து... என்று ஞாபகம்!
...1960ல் பெய்ருட்டில் ஜேம்ஸ் டர்னர் என்ற ஆங்கிலேயரை மணந்து உடனே விவாகரத்தும் செய்தாள். இதனால் பிரிட்டிஷ் குடியுரிமை கிடைத்தது... குடியினால் உடல் நலம்கெட்டு 1961ல் சிங்கப்பூரில் டர்னர் மரணம்...
அவரால் அதற்கு மேல் தாக்குப்பிடிக்க முடியவில்லை—பாவம்...!
முடிவுரையாக:-1961ல் மாடஸ்டி பிளைஸி தன்கும்பலை கலைத்துவிட்டு இங்கிலாந்து வந்து சேர்ந்தாள்... இப்போது அம்மாதிரிவேலைகளுக்கு முழுக்குப்போட்டு விட்டதாக கேள்வி!
...சொத்து ஒரு மில்லியன் தேறும் என்று மதிப்பிடப் பட்டுள்ளது!
மிக அருமையாக எழுதியிருக் கிறாய் ப்ரேஸர்.! துல்லியமான தகவல்கள்! இல்லையா மிஸ் பிளைஸி?
ஆமாம்... குற்றச்சாட்டுகளை நிருபிக்க ஆதாரம் எதுவுமே கிடையாது அத்தோடு நான் ஒரு போலீஸ் அதிகாரியுமல்ல என்பதை நினைவூட்ட விரும்புகிறேன்!
வாஸ்தவம்தான்...! ஆனால் அனைத்தும் யூகத்தின் பேரில எழுதப்பட்டிருக்கின்றன!



எனவே...
ம்...வந்து— உனனே நாங்கள் பயன்படுத்திக கொள்ளலாம் என்ருெரு எண்ணம்!
யாரும்-யாருமே என்னைப் பயன் படுத்திக் கொள்ள அனுமதியேன் ஸர் ஜெரால்டு! அகதிகள்முகாமில் பன்னிரெண்டு வயதில் நான் எடுத்த தீர்மானம் இது!
நிச்சயமாக...!
அப்படியாளுல்.. மிஸ்டர் டர்னரோடு பெய்ரூட்டில் நடந்த திருமணத்திற்கு பிரிட்டிஷ் குடியுரிமை பெறும் நோக்கம்மட்டும்தான் காரணம் இல்லையா?
ந . ல்..லது- ஆனுல் அது செல் லாதுஎன்பது தெரியுமா உனக்கு ஏற்கனவே அவர் மணமானவர் என்பதற்கான ஆதாரம் எங்கள் வசம் உண்டு!
அவருக்கு நீ பெருந்தொகை கொடுத்தது விரயம்... இப் போதும் நீ நாடற்றவள்- எந்த விஞடியும்உன்னை நாடுகடத்தி விட இயலும்!
அதாவது நீங்கள் கொடுக்கும் பணியை மேற்கொள்ள நான மறுத்தால நாடு கடத்தி விடு வீர்கள்.. அபபடித்தானே?
ம். . அப்படியில்லே —
15


உன் பிரிட்டிஷ் குடியுரிமையை பறிக்கும் ஒரே சான்று இந்த முந்தைய திருமண சான்றிதழ்
இதோ ஒரு—சட்டவிரோ காரியத்தை செய்துவிட்டே உன் மீது எனக்குள்ளபிடி அழித்துவிட்டேன் ப்ரேஸ் கூட அதிர்ந்து விட்டார் ப
அதிபுத்திசாலி நீங்கள் ஸர் ஜெரால்டு! பட்டகடனை திருப்பிக் கொடுப்பதில் தீர் மானமானவள் நானென்று எப்படித்தெரியும்உங்களுக்கு?
சொல்லுங்கள்.. உங்களுக்காக என்ன காரியம் நான் செய்ய வேண்டும்? ஏதோ கொலை என்று
ஆமாம்! நேட்டோவிலுள்ள அதிகாரிகள் நம்முடைய நா எதிரிகள் பெரிதும் பயன்படு வரும் 'மரண இயந்திரம்' என்ற அமைப்பைஒழித்துக வேண்டும் என விரும்புகிறுர்
அஹ்.. மரண இயந்திரமா? கூலிக்காக கொலை செய்யும் ஸ்பெஷலிஸ்டுகள் அல்லவா..? பணத்தைகொடுத்து நபரைக் குறிப்பிட்டால் போதும் கச்சித மாக முடித்து விடுவார்கள்!
இதில் நான் உதவமுடியு மென்றுநினைக்கிறீர்களா?
சொகுசான வாழ்க்கை உனக்கு அலுத்துப் போயிருக்கும் என்பது என கணிப்பு .நாளைஎன்னைவந்து பார்— அடுத்த நடவடிக்கை பற்றி பேசுவோம்!


'மரண இயந்திரம்' சாதுரியம் மிக்கதொரு கொலைக் கும்பல் ஊடுருவுவது கடினம், வேரறுப்பது அதைவிட கடினம்!
நானே நான்வருவதானுல் கூடவே வில்லி கார்வினையும் அழைத்து வரலாமா?
'ரெட் ஒர்க்' கை நீ நடத்தி வந்தபோது உனக்கு வலது கையாக இருந்த இவனுன் தானே?
வில்லிகார்வினைநான் நன்கு அறிவேன்... அழுத்தமான ஆசாமி உங்களிருவரின் உதவியும ஒருசேரகிடைக்குமென்று நான்எதிர் பார்க்கவேயில்லை...மிஸ் பிளைஸி!
வரைப் பற்றியும் குறிப்
ட்டில் உள்ளது ஸார்
க்கட்டுமா—
நீ கெட்டிக்காரன்தான் ஒத்துக் கொள்கிறேன்... தயவுசெய்து அதை மூடிவை
நான் இன்னமும் தீர்மானிக்கவில்லை! அப்படி நான் வரத் தீர்மானித்தால்,வில்லியோடு பேசிப்பார்க்கிறேன்!
றி...மிக முக்கியமான தீர்மானம்
க்க வேண்டிய கட்டாயத்தில்
ருக்கிருய்!
அலட்டிக் கொள்ளப் போவதில்லை நான ... குட்நைட்!
உங்களுடையஇலட்சியமும் என்னுடையதுபோலவே அலுப்பூட்டியிருக்கும்என்று எண்ணுகிறேன்...வில்லி!


இலண்டனிலிருந்து முப்பது மைல் தொலைவில் ஆற்றோரமாக இருந்தது - வில்லிகார்வினுக்குச சொந்தமான சொகுசு ஹோட்டல்!
மிஸ்டர் கார்வின எழுந்துவிட்டாரா...?
முதலாளியா? இன்னும் எழவில்லை... மிஸ்...
சில நிமிடங்களுக்குப்பின்
தாழிடப்பட்டிருக்கிறது ..
தொழிலுக்கு முழுக்குப்போட் பின்னரும் நீங்கள் முன்னெச்ச கையோடு இருப்பதுதிருப்தி தருகிறது..வில்லி!
பூட்டில் ஏதோ விஷமம் செய்தான் மாடஸ்டி.
க்ளிக்!
பூட்டைதிறக்க உதவிய கருவிலை மாடஸ்டி உருவி எடுத்தான்...


இப்படி மின்னல் வேகத்தில் இயங்குவதுஎப்போதுமே நல்லதுதான...! ஆனால் இப்போது விபரீதமாகஏதும் செய்து விடாதீர்கள்—வந்திருப்பது நான்தான்!
ஹலோ...வில்லி!
ஹாய்... இளவரசி!... நீயா? ரொம்ப நாட்களுக்கு அப்புறம்...!
நீங்கள் மட்டுமென்ன...? என்னைத்தேடி ஒருதடவை தானேவந்தீர்கள்!
முன்புபோல் இல்லை வாழ்க்கை ஒரேயடியாக போரடிக்கிறது!
எனக்கும்தான்...நாம் எதிர்பார்த்தபடி இல்லை வில்லி-இளமையும் செல்வமுமாக ஒய்வான சொகுசு வாழ்க்கை வாழ ஆசைப்பட்டேன்,அலுத்துவிட்டது ஒரேயடியாக—
நான் எதிர் பார்த்ததுதான்
ஹோட்டலை என்னை விட திறமையாக நிர்வகித்து வருகிறார் என் மானேஜர்... பொழுதைக்கழிப்பதே பெரும்பாடாக இருக்கிறது
19


நோக்கத்தோடுதான் இங்கே வந்திருக்கிறாய்— இல்லையா?
ஓகோ... அந்த கையாலாகாத சோதாக்களுக்காக நாம்போய் பயங்கரவாதிகளோடு மோத வேண்டுமா?
என்னைக் கேட்டிருக்கிறார்கள்....
அந்தக்கொலைவெறியர்களோடு போய்மோத உன்னை தனியே அனுப்புவேனா...என்ன?
இப்போது நான் உங்களைக் கேட்கிறேன் கட்டாயமில்லை...
அத்தோடு பழைய தொழில்தான் உற்சாகம் தரும்போலிருக்கிறது...
முட்டாள்தனமான முடிவாக இருக்கலாம் ஆனால் நமக்கு ஏற்ற தொழில் அதுதான் என்பது நிஜம்!
அப்பப்பா... அந்த நாட்கள் நினைக்கும்போதே சிலிர்க்கிறது உடலும் உள்ளமும்!
ஆபத்துக்கள்.. சாகஸங்கள் அதிரடிதாக்குதல்கள்! நமக்கு ஏற்ற விளையாட்டுக்கள்!


ஹோட்டலின் பின்னுலிருந்த தொழிற்பட்டறையில்—
புதிதாக ஏதாவது உண்டா...?
ஓ...ஆனுல்சும்மாபொழுது போக்கிறகாகத்தான்...!
மினி-எலெக்ட்ரோ—மாக்னட்டேப் ரிகார்டர்!
இத்தனே சிறியதாகவா...! நீங்கள் ஒருஜீனியஸ் வில்லி!
இதுஒருபேனுதுப்பாக்கி! ஆறு 22 தோட்டாக்களேக்கக் கூடியது!
பிரமாதம்... ரொம்பபிடித்தி ருக்கிறது எனக்கு!
மணி பத்து— நான்போக வேண்டும்! நான்குமணிக்கு நாம் ஸர்ஜெரால்டை சந்திக்கிருேம்.
பிற்பகலில் ஸாமின் 'ஜிம்'மில் எனக்கொருவேலேஇருக்கிறது...
அங்கே வந்துஉங்களேநான் பிக்-அப் செய்துகொள்கிறேன்!
சரியாக மூன்றரை மணிக்கு தயாராக இருங்கள!
ஓ...ஷ்யூ



ஓ...உங்கள் தோழி—
கொள்ளை அழகு:
தோழி அல்ல மிஸ்டர்—
என இளவரசி!
தோழி என்று சொன்ன
தால் அல்லவா உள்ளே
விட்டேன—தவறோ?
இங்கே அவளுக்கில்லாத
சுதந்திரமா..! அவன்கேட்
டால் என் உயிரையும்
கொடுப்பேனே!
பிற்பகலில்-
'ஜிம்' மில் ..
ஹே , லேடி —
இங்கே எல்லாம்
வரககூடாது!
ஓ...மிஸ் பிளேஸி...நீங்களா...? ஸாரி!
கார்வின் சொல்லியிருந்தார் நீங்கள்
வருவீர்களென்று!
வில்லி எங்கே...?
நான் கொஞ்சம் முன்னால்
வந்துவிட்டேனோ?
ஆமாம்..!இதோ
வந்துவிடுவார்!



இங்கே ஜுடோ, கராத்தே கற்றுக் கொடுக்கிறீர்கள் — இல்லையா?
வில்லியின் 'தாப்-ஸ்டைல்' சண்டை முறையை பற்றி உங்கள் கருத்து என்ன ஸாம்!
முஷ்டி, முழங்கால், முழங்கை இவற்றுக்கு முக்கியத்துவம்கொடுக்கும்சண்டை முறைதானே?
மின்னல்வேக அசைவுகள்கொண்டது.. பாங்காக்கில் இருந்தபோது அதைகற்றுக் கொண்டார்வில்லி!
அடிப்படை அதுதான் — ஆனால் விதிமுறைகள் நிறைய உண்டு!
ஹலோ..பிரின்ஸஸ்- ஸாமின் மட்டமானகாபியில் எனக்கும் கொஞ்சம் கிடைக்குமா?
அதன்பின்னர் ஸர் ஜெரால்டு டார்ரண்டின் அலுவலகத்தில்..
மணி நான்காகப்போகிறது..! அவன் வருவான் என்று, இன்னமும் நம்பு கிறீர்களா ஸார்?
அவன் வராவிடில் — என் கணிப்பு பொய்த்துவிடும்!


மணி நான்கு—மாடஸ்டியும், கார்வினும் அங்கே வந்து சேர்ந்தனர்..
அந்த கொலைக்கும்பல் சம்பந்தப் பட்ட பைல் இதோ தயாராக இருக்கிறது!
ரொம்ப சின்னதாக இருக்கிறதே?
ஆமாம்..ரொம்ப ரொம்பசிறியது— முதலில் நீஇதை படித்துவிடு... பிறகு பேசுவோம்!
எங்களுக்கு உதவியாக மீண்டும் இங்கே வநததற்கு நன்றி மிஸ்டர் கார்வின்...
நான் மிஸ் பிளெஸிக்காகவே இங்கே வந்தேன் உங்களுக் காகஅல்ல!
உருப்படியான தகவல் எதுவுமே இல்லையே! இந்த முயற்சியில் மூன்றுபேர் ஏற்கனவே பலியாகி விட்டிருக்கிறார்கள்...!
என்ன வகையான யுக்தி?
மரண இயந்திர அமைப்பு,ஐரோப்பா வின்ஒவ்வொரு பகுதிக்கும் ஏரியா மானேஜரை நியமித்திருக்கிறது. அவர்கள் மேலிடத்து உத்தரவுக்கி ணங்க கொலையாளிகளை அமர்த்தி குறிப்பிட்டகொலையை செய்து முடிக்கிறார்கள்
எல்லாமே வியாபாரமாகிப் போய்விட்டது.. இந்நாளில்!
தலைமையகம் பிரான்ஸில் இருக்கும் என்பது யூகம்...! ஊடுருவிச்சென்று மேலிடத் தைசந்திக்க வேண்டும்— உன்னால் முடியுமா மிஸ் பிளெஸி?


எங்களுக்காக திட்டம் ஏதாவது தயாரித்திருக்கிறீர்களா... ஸர் ஜெரால்டு?
ஹே... என்னையே ஆழம் பார்க்கிறாயா... டியர்
பிரச்னையை நீ உன்வழியில் அணுகுகிறாய்—டிபார்ட்மெண்ட் முடிந்த உதவிகளை செய்யும்!
நமக்கு ரொம்பவும் பிடித்தமான ஏற்பாடுதான்—இல்லையா... இளவரசி?
முதலில் என்ன செய்யப் போவதாக உத்தேசம்?
ஏற்ற வாடிக்கையாளர்களை இனம் கண்டு அவர்களை அணுகி ஒப்பந்தம் செய்துகொண்டு காரியத்தைநிறைவேற்றிக்கொடுப்பதாகதெரிகிறது...
எனவே அவர்களுக்கேற்ற வாடிக்கையாளராக நான் நடிக்கப்போகிறேன்! குறிக்கோள்— கார்வினைக் கொல்ல வேண்டும்!
நல்லயுக்தி..! இருவருக்குமிடையே குரோதம் ஏற்பட முதலில் பின்னணி ஒன்றை செட்-அப் செய்யவேண்டுமல்லவா...?
அது ஒன்றும் கஷ்டமானதல்ல!


சரி... அவர்கள் உன்னிடம் வந்து பேரம் பேசுகிருர்கள் — அப்புறம்...!
அதையெல்லாம் என்னிடமேவிட்டுவிடுங்கள் ஸர்ஜெரால்டு!
உதவிதேவைப்பட்டால் பிரான்ஸிலுள்ள என்உதவியாளரோடுஎப்படி நீ தொடர்பு கொள்ள வேண்டும் என்பதை மட்டும்சொல்லிவிடுகிறேன..
உங்களுடைய உத்தரவுப்படி, எதையும் செய்துகொடுக்க வேண்டும் என்று அவருக்கு உத்தரவிடப்படும் சரிதானே!
நன்றி...ஸர் ஜெரால்டு!
ஆயுதங்கள் ஏதாவது தேவைப்பட்டால் சொல்லுங்கள்..
தேவையான கருவிகள் எங்கள் வசம்இருக்கின்றன வில்லிக்கு துப்பாக்கி என்ருலே அலர்ஜி!
தரையைக்கூட சரியாக குறி வைக்கத் தெரியாது இவருக்கு!
அதெல்லாம் நமக்கு ஒத்துவராது..!
துப்பாக்கி மிதமிஞ்சிய நம்பிக்கையை கொடுப்பதால் சிலவேளைகளில் தோல்விக்கு காரணமாகி விடுவதுண்டு என்பது இவருடைய வாதம்...!
அதில் அர்த்தம் இருக்கிறது...!



றவர்களுக்கு நேர்ந்தகதிதான்
டஸ்டி பிளேஸிக்கும் ஏற்பட்டு
டுமோ என்று குழம்புகிறீர்களா?
உளவாளியை இழந்து
டுவோமோ என்றதல்ல
ன் கவலை...
இந்தப்பெண்ணின்மீது இனம்
தெரியாதபிடிப்பு ஏற்பட்டு
விட்டது எனக்கு— அதனுல்தான் —
இப்படியெல்லாம் நான் மனத்தைஅலைய
டக்கூடாது-கொண்டுவா, அந்த டி, செக
ன் பைலை! எண்ணவோட்டத்தை திசை
ருப்ப அது உதவக் கூடும்..
பின்னர் மாடஸ்டி
யின் மாளிகையில்
நாமிருவரும் ஒருவரையொருவர்
கொன்றுவிடும் வெறியோடு
அலைகிருேம்என்றசங்கதிரொம்ப
தத்ரூபமாக அரங்கேற்றப்பட
வேண்டும்... இளவரசி!
டிந்துகொண்டிருந்தது...
நட் கிளபபில் வரவிருக்கும்
லைமாக்ஸ் காட்சிவரை நாம்
ப்படி நடந்துகொள்ள வேண
டும் என்ற விபரங்களை தீர்மா
னித்துக் கொண்டாயிற்று...!
இனியும் இந்தக குறிப்
புகள் தேவைபடுமா?
எனககுத் தேவையில்லை
உங்களுககும்தான.கிழித்துப
போட்டுவிடுங்கள்... இபபோதே!



மாடஸ்டி பிளெஸி மீண்டும் தொழிலுக்கு-தனியாக-திரும்பிவிட்டதாக அடிமட்ட கும்பலிடையே 'கிசு கிசு' பரவியது...
அவளும் கார்வினும் உயிர்சிநேகிதர்கள்—அவர்களிடையே சிறு மனஸ்தாபம கூட ஏற்பட்டது கிடையாது!
இருக்கலாம்! ஆனால் காலப் போக்கில மனிதர்கள் மாறி விடுகிறார்கள்... கார்வின் நிறையகுடித்து விட்டுவிழுந்து கிடந்தானும்போனவாரம்!
ஓய்ச்சல் அவனே அப்படிமாற்றி விட்டிருந்தால் மாடஸ்டியையும் மாற்றிவிட்டிருக்கலாமல்லவா?
...ஆனாலும் நம்பமுடியாத சங்கதிதான்...
வதந்தி கொஞ்சம் கொஞ்சமாக வேரூன்றி வலுப்பெற்றது—
மாடஸ்டியோடு பேசிவிட்டு வந்திருக்கும நீ ஏன புதிய 'ரெட் ஒர்க்' காம்சேரவேணடாம் என்கிறாய்? கூட்டுநமக்குலாபகரமானதாகத் இருந்தது!
அவளிடம் பெருத்த மாற்றத்தை கவனித்தேன்... முன்பிருந்த அழுத்தம் இல்லை-ஒரு கொள்கைப் பிடிவாதத்தோடு திரும்பி வந்திருக்கிறாள்-ஆனால தன்னம்பிக்கையைகாணோம்
பாரிஸில்— மூன்று வாரங்களுக்குப் பின்...
தந்திரம் பலித்துவருகிறது. நாளை இரவு கிளைமாக்ஸ் காட்சி வைத்துக் கொள்வோமா?
ஓ.கே...நாடகம் தத்ரூபமாக இருந்தால மட்டும்போதாது-நிஜமாகவே இருக்க வேண்டும் புரிகிறதா?


க விரோத கும்பல்களின்மேல்
ததினர்கூடும் அந்த
கிளப்பில...
ள்ள திரும்பிப்பார்—
டஸ்டி பிளைஸி ..!
இவளுக்கும் கர்வினுக்குமிடையே
பேச்சுவார்த்தைகூட கிடையாதாம் ..
காவின்ஆபத்தானவன்தான்
ஆறலுமிவளை அவன் பகைத்
துக்கொண்டது முட்டாள்தனம்
லைந்து போ... அதோ
வனும் வருகிறான்!
உன்னோடு கொஞ்சம்பேச வேண்டும் என்று
எங்கெல்லாம் உன்னைத்தேடியலைந்து கொண்
டிருக்கிறேன் தெரியுமா?
என்னோடு உனக்
கென்ன பேச்சு
வேண்டிக்கிடக்கிறது
ன்...? தொழிலைவிட்டு எங்களையும்
முழுக்குப்போடவைத்தாய்... இப்போது
மீண்டும் நீ தொழிலில் இறங்கினால்
எங்களையும் சேர்த்துக் கொள்வதுதான்
முறை!
எனக்கு எடுபிடி ஆள்
யாரும் தேவையில்லை-
எதையும் தனித்துச்செய்ய
உத்தேசம்!
வத்தைப் பார்த்தால்—
ஒன்றிரண்வார்த்தைகள் புரிகிறது
கார்வினுபிரெஞ்ச் நன்றாக
தெரியுமென்தான் இமுவெடுத்த
இங்கிலீஷ்சித்தொலைக்கிறானே


பொறுமையை ரொம்பவும் தான்சோதிக்கிறாயடி அழகை... என்னையும் கூடாகச் சேர்த்துக்கொள்- இல்லையேல்... மென்னியை முறித்துவிடுவேன்—ஜாக்கிரதை!
பெண்புலியாக மாடஸ்டி சீறியதை செவிமடுத்தனர் அங்கிருந்தோர்...
என்னை ஒருபயல் மிரட்டமுடியாதடா... பொறுக்கிநாயே
வன்முறையைநாடவேண்டியநிர்ப்பந்தத்தை ஏற்படுத்திவிட்டாய் நீ!
தூத்தேறி... எடுடாகையை என்னிடமாவாலாட்டிப்பார்க்கிறாய்? முகரையை பெயர்த்துவிடுவேன் ஜாக்கிரதை!
ஒகோ... என்ன நீளுகிறது! இந்தகார்வின் ஓ வாய்ச்சவடால் பேர்வழியிட
என் ஒரு அடிக்கு தாக்குப்பிடிப்பாயா...நீ வாடி... இப்படி—



ாய்ச்சண்டையில் ஆரம்பித்து
கை கலப்பில் தொடர்ந்தது...
யாராவது ஒருவர்
இன்ஜேடு காலி!
மாடஸ்டியின் தாடையில்,
கையால் ஒருவெட்டு வெட்டி
ர் கார்வின்...
திருப்பி அவள் ஒன்று
கொடுத்தால் பயல் தாங்க
மாட்டான்!
மயங்கிச்சரிந்த மாடஸ்டி
மேஜை மீது விழுந்தாள்..
ஆயுளுக்கும் ஞாபக
மிருக்கும்—இந்த அடி—!
மிஸ்டர் கார்வின்—...ப்ளீஸ் போலீஸ்
இங்குவருவதை நாங்கள் விரும்பவில்லை
தூய பிரெஞ்ச் மொழியில்
அலட்டிக் கொள்ளாதே, ஜீல்ஸ்...
ஒருலேடி மயங்கி விழுந்து கிடக்கி
ருள்—வெப்பம் தாளாமல் என்று
நினைக்கிறேன். இந்த உண்மைக்கு
உனவாடிக்கையாளர்களே சாட்சி!


மேடம்...! மேடம்...பிளீஸ்!
ஆ, மெள்ள மேடம்—
கார்வின் போய்விட்டது
விடு என்னை — உன்
தேவையில்லை...போ
தொலை!
சுதாரித்துக்கொண்டு மெள்ள
எழுந்தாள் மாடஸ்டி...
கையில் காயம்... கட்டுப்
போட ஒரு துணி கொடு!
பிறகு எனக்கு ஒரு டாக
ஸியை கூப்பிடு!
நைட் கிளப் சம்பவம் நடந்து
இரண்டு மணிநேரம் கழித்து
மாடஸ்டியின் மாளிகையில்...
வில்லி...நலம்தானே?
ரொம்பஎச்சரிக்கையோடு
நடந்து கொண்டேன்--
இன்னமும் யாரும்என்னை
பின்தொடர வில்லை!
முதலில் கை காயத்துக்கு கட்டுப்
போட்டுவிட்டு என் கழுததை சரி
செய்யுங்கள்...!
பலமாக அடிதது
விட்டேனோ...?


ட்டு சரிதானா...?
ாதம்...! இனி கழுத்துப் ப்பை கவனியுங்கள்!
என்னைத்தீர்த்துக்கட்ட நீ விரும்புவாய் என்றெண்ணிஉன்னைததேடி 'மரண இயந்திர' ஆசாமிகள் எப்போது வருவார்களோ?
அங்கே வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தவர்களில் ஒருவனாவது அவர்களுடைய ஆசாமியாக இருப்பான்!
...சக்கை!
நாம் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருப்பதுதானா... அது?
மேடம் பிளேஸியா? 'மரண இயந்திர' ஆள் நான் - எங்களுடைய தொழில் தான உங்களுக்குத்தெரிந்திருக்குமே? எங்களுடையசேவை இப்போது உங்களுக்குதேவைப்படும் என்றொரு யூகம்!
ஆ... ஆமா...ம்!
பொதுவாக இம் மாதிரி பிரச்சனைகளை நானே கவனித்துக்கொள்வதுண்டு... ஆனால் இம்முறைதொகை ஒத்துவருமானால்- உங்களிடம் விட்டுவிடவிரும்புகிறேன்!
முப்பதாயிரம் பவுண்டுகள்..!
மூன்றே நாளில் முடித்துவிட வேண்டும்— முடியுமா?


...கச்சிதமாக முடித்துவிடுவோம்!வேலை முடிந்த முப்பது நாட்களுக்குள் பணம் வந்துவிடவேண்டும்..! தவறினால்— தண்டனை...விபரீதமானதாக இருக்கும்!
எனக்குத் தெரியாதா...? கார்லினை கொல்லவேண்டும்-மூன்றுநாள் அவகாசம் கைமேல் ரொக்கம்சரிதான
நாம் பிரிய வேண்டிய தருணம் வந்துவிட்டது வில்லி!
வேகமாகபலித்து வருகிறது நம் திட்டம்!
திட்டப்படி எல்லாமுன் பாடுகளையும் செய்து வி களல்லவா?
ஓ...!மாண்ட்மாட்ரேயிலிருக்கு சிநேகிதி ஒருத்தி என்னை வரச் சொல்லி ரொம்பநாளாக வற்பு திக் கொண்டிருக்கிறாள்...
அவளுக்கு ஏதாவது கெ டது சம்பவித்து விடக் கூடாது...!
அங்கேபோய், அடுத்த மூன்று நாட்களுக்கும் நன்றாக குடித்து சுகமாக ஓய்வெடுக்கப்போகிறேன்!
சிநேகிதிகளின் நலனில் எப் போதுமே எனக்குத் தனி அக்கறை உண்டு..இளவரசி


ரண்டு தினங்களுக்குப்பிறகு
ணட்மாட்ரேயில..நள்ளிரவு
ந்து ஓரிரு மணிநேரம் கழிதது—
ன்னும் விளக்கு
ரிந்து கொண்டி
க்கிறது...
மிமிக்கு இரவு நடுவில் விழிப்பு
வரும்போதெல்லாம் கைஎட்டும்
தொலைவில் பாட்டில் இருக்க
வேண்டும் இப்போது கார்வின்
தேவைப்படக கூடும!
வேலை சுலபமாகி விட்டது-
வா.. போகலாம்!
ார்வினின் தலையணையடியில்
பஸ்ஸர்' இருமுறைசன்னமாக
லித்தது...
ருவர் மாடிப்படியேறி
ருகின்றனர்...
வில்லி...குடிக்க எழுந்தீர்களா
எனகரும் கொஞ்சம் ஊற்றிக்
கொடுங்களேன்...!
பிறகு தருகிறேன்—இப்போது
கொஞ்சநேரம் நீ ஆழ்ந்து
தூங்கவேணடியது அவசியம்..
படுக்கைககு அடியில்—
சுகமாக!
ஊப்ப்...!
கொலையாளிகள் ஓசையின்றி
முன் அறையினுள்நுழைந்
தார்கள்...



F-2



குறட்டைஒலி பலமாக வந்துகொண்டிருந்தது, கார்வினிடமிருந்து...! படுக்கை அறைகதவு ஓசையின்றி திறந்து கொண்டது.
கார்வின் இருக்கிறான்- காணவில்லை ஒருவேளை வெளியிலிருந்து வரலாம் மாடிப்படியை கவனித்தவா இங்கேயே நில்!
கிட்டே வா...
விளக்கோடு இணைந்த சிறு சுவிட்ச், கார்வினின் கையில்!
சட்டென்று சுவிட்சை அழுத்தினர்
க்ளிக்!
சட்டென்று அறையினுள் சூழ்ந்தகும்மிருட்டு, எதிரியை குருடாக்கியது—
அந்த வினாடியில் கார்வினின் முழங்கை எதிரியின் தொண்டையில் விசையோடு இடித்து ஓலம் கொஞ்சம்கூட வெளியே வராதவாறு உறுதி செய்தது



ருவன் தீர்த்தான்...
ருவன் பாக்கி!
இரண்டாமன் காலடியோசை கேட்டுத் திரும்பினன்...
முடிந்ததா.?
ஓ... இதோ—
முடிந்துவிட்டது...!
மீண்டும் 'தாய்-ஸ்டைல்' முழங்கை குத்து—
போன் மாடஸ்டியை எழுப்பியது...
ஓகோ... அப்படியா சமாச்சாரம்?
ஆமாம் .. இருவரையும்வீழ்த்தி விட்டேன் மிக சுலபமாக!
இவர்களை அனுப்பிய ஏரியா மானேஜரின் முகவரி கிடைத்தது.ரியூ பெர்ரியனிலுள்ள கண்ணியமான வழக்கறிஞர்...!
அவருடைய பெட்டகத்தை உடனேதிறந்து ஆராய துடிக்கிறேன் இன்னும் போதிய அவகாசமிருக்கிறது அதற்குள் முடித்துவிடலாம்!


ஸர் ஜெரால்டின் உதவியாளரோடு தொடர்பு கொண்டு மிமியின் இருப்பிடத்துக்கு உடனே பிரெஞ்ச் போலீசை அனுப்ப ஏற்பாடு செய்கிறேன்...
கொலையாளிகளை அவர்கள் வசம் ஒப்படைத்து விட்டு நீ பொரியனுககு வந்து என்னை சந்தியுங்கள்...!
ஓ . யெஸ்—இளவர
மிமி விழித்துக் கொண்டு விட்டாள்...
வில்லி...?
என்ன நடந்தது? படுக்கைக்கு அடியில் எப்படி போனேன்? தலைஒரேயடியாக வலிக்கிறது..! ஆவ்யார் இந்த ஆசாமிகள்!
போக்கிரி பயல்கள்...! இந்தமாத் திரைகளை விழுங்கிவிட்டு நீ இன்னும் கொஞச நேரம் தூங்கு பயல்களை நான் அபபுறபபடுத்தி விடுகிறேன்!
ஓவ்வ்வ்...! சரி வில்லி!
இலண்டனில்—பாரிஸிலுள்ள தன் அதிகாரி ப்ரேட்டிடமி ருந்துவந்த அறிக்கையை படித்துக் கொண்டிருந்தார் ஸர் ஜெரால்டு...
மாடஸ்டியும் கார்வினும் மரண இயந்திரத்தின் ஏரியாமேனேஜர் யாரென்று தெரிந்து கொண்டு விட்டார்களாம், ப்ரேஸர்! அவருடைய பெட்டகத்தை திறந்து சோதனையிடப்போகிறார்களாம்!


மரண இயந்திரத்தின் ஆட்கள் இன்னமும் கார்லினை தேடியலை யக்கூடும்.. இப்போது மனிதர் எங்கே ஒளிந்து கொண்டிருக் கிறாரோ?
அவர்கள் கற்பனை செய்துகூட பார்க்க மாட்டாத இடத்தில்- அவரை கொல்ல அவர்களை ஏவிய அதே பெண்ணருகே!
வில்லி—காபி!
அட—மதியமாகி விட்டதே! நீ என்னை இப்படி தூங்க அனுமதித்திருக்கக் கூடாது!
உங்களுக்குக் கொஞ்சம் ஓய்வு தேவை என்று எண்ணினேன
அந்த போக்கிரிகளை அடித்து வீழ்த்தியதை குறிப்பிடுகி றாயா...?அது ஏதோ ஒரு விளையாட்டுப்போல— அவ்வளவுதான்!
இல்லை... மிமியோடு இருந்து விட்டு வந்திருக்கிறீர்களே என்பதால் சொன்னேன்!
நீ தானே அங்கே அனுப்பி வைத்தாய்—! அது போகட்டும்... இன்றிரவு நாம் அங்கே போகிறோமல்லவா?
ஆமாம்...பின்புறமாக நுழைந்து, முற்றத்தின வழியாக சுலபமாக அலு வல் அறையினுள் புகுந்து விடலாம்—!
39


பெட்டகத்தை உடைப்பதைவிட நேரடியாக அந்த ஆசாமியிடமே விவகாரத்தை வைத்துக் கொண் டால் எப்படி—யோசி...!
சரிப்படாது...! பயலை கா மென்றால் மேலிடம் உஷாராகிவிடும்!
...யாரோ வருகிறார்கள்—பதுங்கிக் கொள்ளுங்கள்
என்னுடைய பிரெஞ்ச் சகா—நிமியோ, ஓர் ஆளை ஏதோ ஒரு சிக்கலான சட்ட ஆலோசனை கேட்கும் முகாந்திரத்தில் அந்த மோசடி வழக்கறிஞரிடம் அனுப்பினார்...
அங்குள்ள பெட்டகம் 'சிங்கிள்-காம்பினேஷன்' லாக் கொண்ட மான்னியர்—புது மாடலாம்!
குட்... அதை திறக்க எனக்கு மூன்று மணிநேரம் பிடிக்கும்...!
20 செகண்டுகள் போதும்! நிமியோ பெட்டக தயாரிப்பாளர்களிடம் போய் காம்பினேஷன் என்னவென்று கறந்து வந்துவிட்டார் இதோ—
வேலை ரொம்ப சுலபமாகி விட்டதென்று சொல்லுங்கள் மிக்க நன்றி!
இளவரசி....நீ என்ன வெல்லாம் எடுத்து வரப்போகிறாய்?


'கோல்ட்-32' பிஸ்டலை ஏன விட்டுவிட்டாய்...
பிரபல வழக்கறிஞரும், மரண இயந்திரத்தின் ஏரியா மானேஜருமான ரோவட்டின் அலுவலகம்—
அபாய எச்சரிக்கை அமைப்பில் சேஷ்டை பண்ணியாகி விட்டது. ஏறி வா... இளவரசி!
நமக்கு உதவும் தகவல்கள் இங்கே கிடைக்காத பட்சத்தில் அடுத்து ரோவட்டின ஃபளாட்டுக்கு செல்கிறோமா...?
இங்கேஏதும் கிடைக்கவில்லை என்றால் அங்கேயும் எழுத்து பூர்வமாக ஏதும் இராது...! பொருத்திப் போட்டுவிட்டு, பற்றி எரியும்போது கண்டு கொள்வோம்!
விவகாரமாக எந்த காகிதமும் இல்லை— மரண இயந்திரத்தின தலைமையகம் எங்கிருககிறது எனறு தெரிந்து கொளள முடியவிலலையே!
அனைத்தையும் அள்ளி பெட்டகத்தினுள் போடுங்கள் விலலி...
இந்த குறிபபையும் பார்வையில் படும்படி உள்ளே வையுங்கள்...
உங்களோடு ஒரு விஷயம் பேச வேண்டும். —மாடஸ்டி ப்ளைஸி..


உயிரை பணயம் வைத்து அவர்களை சீண்டுகிறாயா? வேண்டாம் .. மொத்த அமைப்பும் உன்னை காவு கொள்ள உடனே செயலில் இறங்குவது உறுதி!
என்னை உயிரோடு பிடிக்கத் தான் விரும்புவார்கள் — எனக்கு விஷயம் எவ்வளவு தெரியும், இன்னும் யாருக்கெல்லாம் தெரியுமென்றறிய...
எனக்குப் பிடிக்கவில்லை — நீ ஆபத்தோடு விளையாடுகிறாய்!
அலட்டிக் கொள்ளாதீர்கள்... வில்லி- கொலையாளிகளை எதிர்பார்த்து நீங்கள் காத்திருந்தபோது நான் அமைதியாக இருந்தேனில்லையா?
ப்ரேட்டின் ஃப்ளாட்டினருகே காரை நிறுத்தி இறங்கிக் கொள்ளுங்கள் வில்லி .. அங்கேயே நீங்கள பதுங்கிக்கிடக்க வேண்டும்...!
உன்னை அவர்கள் கடத்திச் செல்லும்போது, பின் தொடர்வது யார்?
யாரும் பின்தொடர வேண்டியதில்லை... வேறுவிதமாக சமாளித்து விடலாம்!
காலையில், மாடஸ்டி விட்டுச் சென்ற குறிப்பை படித்துவிட்டு மிரண்டு போனார் வழக்கறிஞர் ரோவட்...
ஜானேன்...!
யெஸ்...ஸார்!
பதினோரு மணிக்கான என் அப்பாயிண்ட்மெண்டை தள்ளிப் போடு — சில நிமிடங்களுக்கு, நான் அவசரமாக வெளியே போய் வர வேண்டியிருககிறது!


ப்ரேட்டுக்கு நியோவிடமிருந்து ஒரு போன் கால் வந்தது...
ரோவட்டின் போனோடு டேப்பை இணைத்திருக்கிறார்களாம்!
விவகாரமான எதையும் தன் அலுவலகத்திலிருந்து பேச ரோவட் ஒன்றும் முட்டாளில்லை!
தற்போது மாடஸ்டி தங்கியிருக்கும் ஹோட்டலிலிருந்து எதிரிகள் அவளை கடத்திச் செல்லும்போது, பின் தொடர வேண்டும் என்ற கருத்தை இன்னமும் வற்புறுத்துகிறேன்
எல்லா பிரதான சாலைகளிலும், பிரெஞ்சு போலீஸார் கண்காணிப்பு வலையை பரவலாக விரித்து வைத்திருப்பதே போதும் ..
வலைகளில் ஓட்டை உண்டு வில்லி!
தெரியும்...! ஆனால் மாடஸ்டியின் போக்கிலேயே நாம் செயல்பட வேண்டிய அவசியம் இருக்கிறதே!
அடுத்த இரண்டு தினங்களிலும் மாடஸ்டி தான் தங்கியிருந்த ஹோட்டலை விட்டு வெளியேறவேயில்லை — இறுதியாக...
எக்ஸ்கியூஸ் மீ ..மேடம்! இந்த குறிப்பைப் படியுங்கள் - நான் யாரென்று புரியும்!
அஹ் ..யெஸ்!
"மூன்று மீட்டர் தொலைவில், இரண்டு துப்பாக்கிகள் உன்னை குறி வைத்துக்கொண்டிருக்கின்றன. வெளியே நிற்கும் காரை நோக்கி என்னோடு நட.. முரண்டினால் மூளை சிதறிப் போகும்"



இத்தனை அலட்டல், அவசியமே கிடையாது...மிஸ்டர்!
இருக்கலாம்! ஆனால் என்தோழர்கள் இப்படித்தான் விரும்பினார்கள் — சரி — போகலாமா?
மரண இயந்திரத்தின் அடியாட்கள் மாடஸ்டியை ஹோட்டலை விட்டு வெளியே கொண்டுவந்தனர்...
நூறு மீட்டர் தள்ளி...
ஆரம்பமாகிவிட்டது ரௌல்..! மூன்று ஆசாமிகளோடு சாம்பல் நிற சிட்ரோனில் ஏறுகிறாள்!
நம்பரை குறித்துக் கொள்...!
சில நிமிடங்களுக்குப் பின் —
நிமியோ போன் செய்தார்..! மாடஸ்டியை கொண்டுபோகிறார்களாம் வந்து நம்மைஏற்றிச் செல்ல கண்ட்ரோல் காரில் அவர் எந்த நிமிடமும் இங்கே வந்துசேரலாம் — தயாராக இரு!
காரில் பலமணிநேரம் பயணம் செய்தபின், முதல் தடவையாக வாயை திறந்தாள் மாடஸ்டி...
இன்னும் எவ்வளவு தூரம்!
வாயை மூடிக் கொண்டு வா — பேச எங்களுக்கு அனுமதி இல்லை!
E-12 மையத்திலிருந்து அறிக்கை -- வலப்பக்கமாக பே-ரிங் நோக்கி கார் திரும்புகிறது!


பின்னால் பத்து மைல் தொலைவில்...
இதற்கென்றே அமைக்கப்பட்டவை போல் சாலைகள் நேராக இருக்கின்றன
செய்தி கிடைத்தது!
மிக சுலபமானதாக தோன்றுகிறது—நல்ல தற்கலல...!
என் காது மடலில் திணவெடுககிறது விரும்பததகாத ஏதோ நடககப போகிறது எனறுரைக்கும் சகுணம்
காது மடலா? இது ஒரு இங்கிலீஸ் ஜோக்கா?
வேடிக்கையில்லை...நிமியோ—ஏனோ, கலக்கமாக இருக்கிறது எனககு!
விடியும் வேளையில், அந்தக் கார் டார்லியர் கிராமத்தினுள் நுழைந்து சிறியதொரு முற்றத் தில்போய் நின்றது...
இங்கே இறங்கி—அடுத்து...?
கேள்வி ஏதும் கேட்காதே என்று முன்பே எச்சரித் தேனில்லையா?
ஓய்...ஏதாவது ஆயுதத்தை ஒளித்து வைததிருக்கிறாளா என்று மீண்டும் ஒருமுறை சோதனை போடு...!



ார்லியர் கிராமத்திற்கு அருகேயிருந்த மேட்டுப்பகுதியில் இருந்தது 'அமைதி இலலம்' என்ற மடாலயம்...
பிரச்சனை இல்லையே?பாரிஸிலிருந்து யாரும் பின் தொடரவில்லையல்லவா?
இல்லை — ஆணித்தரமாக சொன்னார்கள்! அத்தோடு இவளும் இதுவரை எந்த தொல்லையும் கொடுக்கவில்லை!
தான் மாடஸ்டி பிளைஸி— இல்லையா? எங்களோடு பேச வேண்டும் என்று எழுதி வைத்தவள்?
காலை பத்துமணி அளவில்— டார்லியர் போலீஸ் ஸ்டேஷனில்-
விடியும் வேளையிலிருந்து அந்தக் காரைகாணவில்லை...கார்வினின் காது நமைச்சல் எடுத்ததில் அர்த்தம்இருக்கும்போலிருக்கிறதே
டார்லியரியருக்குள் நுழைந்த சிட்ரோன் எப்படி மாயமாக மறைந்ததுஎன்றேபுரியவில்லை?
கிராமத்தினுள் இரகசியமாக அலசிப் பார்த்து விட்டோம்— பலனில்லை!
மாடஸ்டியை அவர்கள் இங்கே ஒப்படைத்து விட்டு திரும்பியிருக்கலாம் நாம் வரும்போது எதிர்பட்ட சிட்ரோன அதுவாகத்தான இருக்க வேண்டும்!


மாடஸ்டி விரும்பியபடிதான் நடந்துவிட்டிருக்கிறது...மரண இயந்திரத்தின் வசம் அகப்பட்டுக் கொண்ட அவளை அதிர்ஷ்டம்தான் காப்பாற்ற வேண்டும் உன் அச்சம் நியாயமானதுதான் கார்வின்!
அந்த அச்சம் இப்போது இல்லை!
நிலைமை சீர்கெட்டுப் போகும் போது என் மூளை ரொம்பத் தீவிர மாக வேலை செய்யும் ! அப்படியொரு சூழ்நிலை உருவா கிவிட்டிருக்கிறது இப்போது..
எத்தனையோ தடவை மரணத்தின் பிடியில் சிக்கிக்கொண்டு விட்ட பின்னரும் ஆபத்தைச் சமாளித்து உயிர் தப்பி வந்திருக்கிறாள்...! பயங்கரமான புலியின் வாலைப்பிடித்துக் கொண்டிருக்கிறார்கள் — எதிரிகள்! வாருங்கள் போய் ரொட்டிக் கடைக்காரரிடம் பேசிப் பார்ப்போம்!
ரொட்டிக்கடைக் காரனிடமா...?
மற்றவர்கள் எழுமுன், தன்பணியை அதிகாலையில் செய்யத் தொடங்கு வது, ரொட்டிக்கடைக்காரன்தானே அவன் எதையாவது பார்த்தானா, என்று விசாரிப்போம்!
இதுவும் ஒரு நல்ல யோசனைதான் .
ஷூவுக்குள் கல் நுழைந்து கொண்டு விட்டது அவ்வளவுதான்!
கார்வின் எழுந்து வேகமாக பேக்கரியை கடந்தார்...
மாடஸ்டியின் ஷூவிலிருந்த குதி இது அந்த வேனின் சக்கரத்தில் மாட்டிக் கொண் டிருந்தது .. இவ்வுண்மையை வெளிப்படுத்தாமல் விசார ணையை நடத்த வேண்டும்!



தினசரி விடியுமுன் தான் ரொட்டி சப்ளை செய்வதாக லாக்ரோனே குறிப்பிட்ட அந்த மடாலயம், அதோ... அங்கேயிருக்கிறது'
வயதான பாதிரிமார்கள்— வீண கால விரயம செய்கிருய் கார்வின' லாக்ரோனேக்கு தொடர்புஇருப்பதாக படுகிறது... அவனே பிழிந்தெடுத்தால உணமை வெளி வந்து விடும்!
அவனுக்கு தொடர்பு இருக்கும் என்பது நிஜமாஞல் இப்போதைக்கு அவனே மிரட்டவே கூடாது என்பேன்—!
மடாலயத்தினுள் பார்வையாளர்களே அனுமதிப் பார்களா?
இல்லே...!
பாதர் மாராஸின். நான்கு வருடங்களுக்கு முன், அலஜீரியாவிலிருந்து இங்கே பொறுப்பேற்க அனுப்பி வைக்கப்பட்டவர்—
...அங்கே யுத்தத்தின்போது அழிவுற்ற ஒரு மடாலயத்தில், தப்பி உயிர்பிழைத்த ஒரே நபர் இவர்தாஞம்...
கேட்டாயல்லவா கார்வின்...? மரண இயந்திரத்தின் தலைமையகம் மேலே அங்கே இருக்க சாத்தியமே இல்லே!
சாத்தியமேயில்லேயாம்...! அதஞல்தான் என் சந்தேகம் வலுப்பெறுகிறது!


உயர்ந்த மதில் சுவரின் பின்னே இருந்த மைதானத்தில் தளர்ந்த வயோதிக பாதிரிமார்கள்பிராத்தனைக்காக சர்ச்சுக்கு சென்று கொண்டிருந்தனர்...
பாதர் மாராஸின்னின் உறைவிடத்தில்—
கொஞ்சமாக ஊற்றிக் கொடு, காஸ்டெலே...! ஓரிரு நிமிடத்தில் நான் கிளம்ப வேண்டும்.
அந்த பெண் இருக்கும் அறையின் பக்கமாக தலை காட்டவே வேண்டாம்— புரிகிறதா?
புரிகிறது... கர்னல்!
அவள் அருகே செல்லாமல், இரவு வரை பீதியில் அவள் வியர்க்கும்படி செய்து விட்டால் பிறகு படிந்து விடுவாள்
என்ன நேருமோ என்ற நிச்சயமின்மை பன்னிரெண்டு மணிநேரம் நீடித்தால் எத்தனை மனவுறுதி படைத்தவரானாலும் நொருங்கிப்போவது நிச்சயம்!
ஆனால் ஜன்னல்களற்ற சற்று ஒதுக்கமான சிறு அறையினுள் கிடந்த மாடஸ்டி நெஞ்சில் பயமோ கலக்கமோ இன்றி நிம்மதியாக துயின்று கொண்டிருந்தாள்...


அடர்ந்த மரங்களினூடே...
வில்லி உன் யூகத்தை சரி என்று ஏற்றுக் கொண்டால்மாடஸ்டியை மீட்க மடாலயத்தினுள் புகுந்து அதை தலைகீழாக புரட்டினால்தான் உண்டு அந்தவிபரீதமான முயற்சியில் இறங்க எனக்கு தைரியம் கிடையாது!
தெரியும் எனக்கு!
நீங்களிருவரும் அரசு ஊழியர்கள்— நான அப்படி இல்லை! ஒரு வேளை சட்டத்தைமீறி ஏதேனும் செய்ய வேண்டிய அவசியம் ஏற்படலாம் என்று கருதியே ஸர் ஜெரால்டுஎன்னையும இழுத்துப் போட்டுக் கொணடிருக்கிறார்...
எனவே...?
ஒதுங்கிக் கொள்ளுங்கள்— பழி உங்கள்மீது விழாது!
இருள் கவிழ்ந்ததும் நான் உள்ளே போக தீர்மானித்திருக்கிறேன்...! ப்ராங்க் சிகரெட்பெட்டியை கொடு
நீ போய் சேருவதற்குள் அவளைகிழித்துபபோட்டிருப்பார்கள் கிராதகர்கள்!
அழுத்தமானவள்...! அவர்களை தேககி நிறுத்தி வைத்திருப்பாள!
எந்த நெருக்கடியிலும் கலங்கவே மாட்டாள் எனகிறாய்— அது சிந்தனையில்லாத முட்டாளகளுககே சாத்தியம்!
எண ணவோட்டத்தை களைந்து, மனத்தை வெறுமையாக வைததுககொள்ள அவளால்இயலும்!
50


அந்திப் பொழுதில்...
குட்நைட்...பாதர்!
சுகமாக தூங்குங்கள்... நண்பரே!
ஒருமணி நேரம் கழித்து அவளை இங்கே கொண்டு வா, காஸ்டெலே!
கதவிலுள்ள துவாரத்தின் வழியாக மூன்று தடவை கணகாணித்தேன் கர்னல! அவள் கொஞ்சமும் கலகக மடைந்ததாக தெரியவில்லை-- நிம்மதியாக தூங்குகிறாள்!
அவளுடைய மனவுறுதியை முதலில தளரச்செய்தாக வேண்டும் பிறகுதான சந்திப்பு!
தலைக்கு மேலே தகர வாளியை கட்டி,டம டம எனறு அடித்து ஓசை எழுப்பினால் மனவுறுதி தளர்ந்து விடும்...கர்னல்!
மற்றவர்களின் கவனத்தை அது ஈர்த்துவிடக் கூடும்!
சகோதரர் லியோன், சற்று நேரத்தில் தொடர்ந்து பதினைந்து நிமிடங்களுக்குமணி யடிப்பாரில்லையா...? அப் போது இவளை மணிக் கூண் டின் உச்சியில் வைத்து விடுவோமே!



அதையடுத்து,
எழுந்திரு... பேச முயற்சிக்காதே-முரண்டு பண்ணவும் எண்ணாதே!
ஐந்து நிமிடங்களுக்குப் பின மணிக்கூண்டின் உச்சியில்...
இப்போது எழப்போகும் இன்னிசையைநன்றுகரசி...இரவு தொடரவிருக்கும் பயங்கர அனுபவங்களுக்கு இது ஒரு முன்னோடி . !
அடுத்து ஒலிக்கத் தொடங்கிய மணியோசை மணிக் கூண்டினுள் ஏற்படுத்திய அதிர்வு தாங்கிக் கொள்ள முடியாததாக இருந்தது...!
எதிரிகளின் நோக்கத்தை புரிந்து கொண்ட மாடஸ்டி, தொடர்ந்து மூச்சை நன்றாக உள்ளிழுத்து வெளியிட்டாள்
அவசரப்படக்கூடாது...!இந்த யுக்தியை நிதானமாக கையாண்டாலதான் பலன் கிடைக்கும்!
மூச்சை நன்றாக உள்ளிழுத்து, பின் சட்டென்று வெளியிட்டு நெஞ்சு,வயிறு பகுதியிலுள்ள தசைகளை கொஞ்சம் கொஞ்சமாக இறுகச் செய்தாள்...
...இம் முயற்சியால் மூளைக்குச் செல்லும இரத்தத்தின் அளவு வெகுவாக குறைந்துபோனதால் சுயவுணர்விழந்து போனாள் மாடஸ்டி...



மடாலயத்தின் மீது கண் வைதது காத்திருந்தார் கார்வின்!
மணியோசை அடங்கிவிட்டது... எல்லோரும் இல்லே, பெரும்பாலோர் படுக்கைக்கு சென்றுவிடுவார்கள் இன்னும் சிலநிமிடங்களில்
ஹாய்...! அது லாக்ரோனேயின் வேன அல்லவா பக்கவாட்டிலுள்ளகதவை நோக்கிசெலகிறுன்...!
அடேய் வில்லி பையா... உன் யூகம் சரிதான்! ஆனால் இனியும் சும்மா வேடிககைபார்த்துக்கொண்டிராதே இளவரசியை அவர்கள் தீர்த்துக்கட்டியதும் தூக்கிக்கொணடுபோக வேன் வரவழைக்கப்பட்டிருக்கலாம்...!
உள்ளே —
இந்நேரம் விசாரணக்கு அவளேதயார் செய்திருப்பான் காஸ்டெலே நீயும் சரியான நேரத்துக்கு வந்து சேர்ந்து விட்டாய்...லாக்ரோனே!
வேனுேடு வந்திருக்கிறேன்... கர்னல்!
ஹாய்... மேடம் பிளேஸி! மணியோசை இனிமையாக இருந்ததா . ?
மணியோசையா? .. நான்கேட்கவில்லையே!
மரண இயந்திரத்தின் தலேவன் நீதான் என்றுல் நண்பனே ஒன்றைத் தெரிந்துகொள்...!உன் ஆட்களுக்கு சமர்த்து காணுது— திறமையானபுது ஆட்களே நியமனம்செய்யஉடனே நடவடிக்கை எடு!
53


கொல்ல ஒப்பந்தம் செய்து கொண்டேன் நீ அனுப்பி வைத்த இரண்டு சோதாக்களால் மிதமிஞ்சி குடித்து விட்டு, அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்த கார்வினைதீர்த்துக் கட்ட இயலவில்லை!
என் ஏரியா - மானேஜர் போதிய திறமையுள்ள ஆட்களை அனுப்ப தவறியிருக்கலாம் அதற்குரிய தண்டனை இதோ இருக்கும் என தொடர்பு அதிகாரி லாக்ரோனே மூலமாக அவருக்கு வழங்கப்படும்!
உன்னை கொல்ல நான் உத்தரவிடு முன், ஓரிரு கேள்விகளுக்கு உன்னிடமிருந்து விளக்கத்தை எதிர்பார்க்கிறேன்!
நீ எப்படி பாரிஸிலுள்ள என ஏரியா மானேஜர் இன்னார்தான என்று கண்டுபிடித்தாய்? வேறு யாருக்கெல்லாம் இந்த உண்மை தெரியும்?
சொல்கிறேனே...
கதைவிட நினைக்காதே? உன்னிடமிருந்து உண்மையை எப்படி கறக்க வேண்டும் என்று எங்களுக்குத் தெரியும்!
என்ன தயக்கம்?
முதலில் நீ யார் என்ற உண்மை தெரிய வேண்டும்!


நான்கு ஆண்டுகளுககுமுன் நடந்த சண்டை ஒனறில் இறந்துபோனதாக கருதப்படும் கர்னல ரெளட் நான்!
நிச்சயமாக ஒரு மதத் தலைவராக இருக்க முடி யாது என்று ஏற்கனவே நான் யூகித்ததுதான்!
ஆனால்... இளவயதில் மத சம்பந்தப்பட்ட சில பயிற் சிகளை செய்திருப்பதால் இப்போது வெகுசுலபமாக நாடகமாட முடிகிறது!
யாருடைய இடத்தில் இப்போது நீ இருக் கிறாய்?
பாதர் மாராஸின்? அல்ஜீரியாவில் அவரை நானகொன்று விட்டு, நானே பாதர் மாராஸினாகி விட் டேன! இவர்களிருவரும் பழைய தோழர்கள். முன்னாள் சார்ஜணட் காஸ்டெலே...முன்னாள் மதபோத கர் லாக்ரோனே?
கடந்த நான்கு ஆண்டுகளில் நீ உணமையான பாதர் மாராஸின் அல்ல என்ற சந்தேகம் யாருக்குமே எழ வில்லையா?
எப்படி எழும்? நான் தான் இந்த மடாலயத்தை, என் மேலதிகா ரிகளை திருப்தி படுத்தும்வகை யில, ஒழுங்காக நிர்வகித்து வருகிறேனே!
பாதர் மாராஸினை வெளி உலகம் அறியாது மடால யத்தில் அவரோடு இருந்த அனைவரும் கொல்லப்பட்டு விட்டனர் ஆக அவருடைய அடையாளம் யாருமே அறியாத உண்மை!
கர்னல்...—பேசிப்பொழுதை வீணடிக்காமல் காரியத்தில் இறங்கலாமே... நாம்?


வியாபார நோக்கில் என்திறமையைவிலைபேச நீங்கள்முன வந்தாலநானதயார்! நானாக இருந்தால் கார்வினை கொல லும் முயற்சியில இப்படி கோட்டை விட்டிருக்க மாட்டேன்!
சும்மா கதைவிடாதே! ஹோட்டலில் உன்னை அவன் அடித்து வீழ்த்தியது தெரியாதென்று நினைக்கிறாயா?
ஏதோ நாம் இவனோடு பேரம் பேச முயற்சிப்பதாக கதையை வளர்த்துக்கொண்டு போகிறாள் முடித்து விடு., காஸ்டெலே!
லாக்ரோனே... அவனை இப்படிகொண்டு வா!
வெளியே...
இனியும் தாமதித்தால் காரியம் கெட்டு விடும் சுடமுயற்சிக்க வேண்டும்...!
ஒருவனைத்தான் நான் கொல்ல முடியும்- அந்தபாக்கியசாலி உங்களில் யார்...?
மெதுவாக அவனை விட்டு விலகுங்கள்...


சிகரட்டை வைத்துக்கொண டிருப்பவனிடம் துப்பாக்கி இருக்கிறது விலலி! மற்றவா களைப்பற்றி எனக்குத் தெரி யாது'
நீ ஒதுங்கிக் கொண்டு விடு . இளவரசி'
யாரும் இங்கே விபரீதமாகஏதும் செயயப்போவதில்லை கார்வின்! கத்தியை கையாளுவதில் நீ சூரன என்று எனக்குத் தெரியும் வா...உள்ளே -- பேசுவோம்!
நாம் ஏன் கூட்டு சேர்ந்து கொள்ளக் கூடாது?
ஒழிந்து...போ!
கார்வினை குறிவைத்து மொட்டையன் வீசியெறிந்தபாட்டிலைகுறுக்கேபுகுந்து தடுத்து நிறுத்தி விட்டாள் மாடஸ்டி துபபாககியை வெளியே எடுத்த காஸ்டெலே, கார்வினின் முதல் கத்திக்கு பலியானுன்...
இரண்டாவது கத்திககு லாகரோனே பலியான போது...
ஆ!


அசையாதே...! அப்படியே நில் கார்வின்!
உன்னை நான் சரியாக குறி வைக்கமுடியாதுபோகலாம்
ஆனல், இவளை கொன்றுவிட முடியும் ஆத்திரப்பட்டு எதையாவதுசெய்து விடாதே என்சகாக்களை இழந்துவிட்டேன் அந்த இடத்தை இட்டு நிரப்ப வேண்டியிருக்கிறது எனவே ..
இளவரசி... இன்னமும் ஏன தாமதம்?
மாடஸ்டியின் விரல்கள் வளைந்து, கட்டுப் போட்டிருந்த மணிககட்டை அழுத்தின . உள்ளே மறைந்திருந்த பேனு துபபாககியிலிருந்து .22 ரக தோட்டா ஒன்று சீறிப் பாயந்தது...
தொலைந்தான் ..கிராகதன!பேனு துபபாக்கியிலிருந்து தோட்டா வெளியபட்டதில் உன்கையில சிராய்பபு ஏதும் ஏற்பட்டதா?
இல்லை...! உங்களுடைய புதுமையான கண்டுபிடிப்புநம்மை காப்பாற்றிக் கொளள, தருணத்தில் கைகொடுத்தது'


முதலில், நம் தோழர்களுககு தகவல் அனுப்புகிறேன்...
ப்ராங்க் ப்ரேட்டுக்கும் மிமியோ வுக்கும் செய்தி எட்டியது...
இதோ... பத்து நிமிட த்தில் அங்கே வந்துசேருகிறோம். வில்லி!
காவல் நிலையத்திற்கு வெளியே —
ரொட்டிக் கடைக்காரன் அவர் களுடைய கையாள் — அப்புறம வேறுயாரெல்லாம்...?
தெரியவில்லை. கார்வின்போனில விஷயத்தை மிக சுருக்கமாக கூறினார் ஆனால் மொத்தத்தில் மூன்றுபேர் இறந்து கிடக்கிறார் களாம்!
மாடஸ்டியை அவர்கள் கொன்று விட முனைந்த தருணத்தில் போய் சேர்ந்திருககிறார் கார்வின்...! பார்த்துகொண்டு சும்மா இருப்பாரா?
ஆனால் துப்பாக்கியின்றி மூவரை வீழ்த்துவது சாத்தியமா?
தலைவனை மாடஸ்டி சுட்டுக் கொன்றிருககிறாள்! கையில காயம்-- அதனால்தானகட்டு என்பதெலலாம ஏமாறறு வேலை! கட்டுக்குள்ளே பேனா துப்பாக்கி ஒளிந்திருக்கிறது!
மரண இயந்திரத்தின் அமைப்பு இயங்கும் விதம் தொடர்புடைய நபர்கள், வாடிககையாளர்கள போன்ற அனைத்து விபரங்களும் அந்த பைலகளில உள்ளன -- பராங்க்!


மற்ற பாதிரிமார்கள் நாளை காலை விழித்தெழுமுன் இந்தஇடத்தை சுத்தம் செய்து விட வேண்டும். உடனே சர்ச் மேலிடத்துக்கு போன் செய்து இங்கே பொறுப் பேற்க, வேறொரு நபரை தாமத மின்றி அனுப்பிவைக்கச் சொல்லுங்கள்!
அதையெல்லாம் நாங்கள் பார்த்துக் கொள்கிறோம், மாடஸ்டி! உனக்கு ஓய்வும் தூக்கமும் தேவை— போலீஸ் நிலையததுக்கு பின்புறம் சிறிய விடுதி ஒன்று இருக்கிறது! உடனே காரில் கிளம்பு!
குளிர் தாங்காமல் நீ நடுங்குவதுதெரிகிறது இந்தா இதை போர்த் திக்கொள், இளவரசி!


வாசகர்கள்
எதிர் பார்த்த
லயன் காமிக்ஸ்
முதல் பவனி
என்பதை
தெரிவித்துக்
ஆவலுடன்
ஜனவரி
1-1-87
வர இருக்கிறது!
மகிழ்ச்சியுடன்
கொள்கிறோம்!
ஜூனியர் லயன் காமிக்ஸ்!
சிவகாசி.


இரத்தக் கண்ணீர்!
நண்பர்களாலும் எதிரிகளாலும் 'பயங்கர முதலை' என்று பட்டப் பெயரிட்டு அழைக்கப்பட்ட கமாண்டர்வான்ஸ் நெய்டரின் உத்தரவின் பேரில் பிரான்ஸின் வடபகுதியிலிருந்த ஒரு கிராமம் தீக்கிரையாக்கப்பட்டது...
எங்களை எதிர்த்துத் தாக்கி வரும் பிரெஞ்சு சக்திகளுக்கு ஒத்தாசை செய்ய முற்பட்டால் என்ன பரிசு-கிடைக்கும் என்று இனியாவது மற்றவர்கள் பாடம் கற்றுக்கொண்டால் சரிதான்... என் வீரன் ஒருவன் செத்தால் உங்களில் ஐவரைக் கொல்வேன்;


அசையாதே...!அப்படியே நில் கார்வின்!
உன்னை நான் சரியாக குறி வைக்கமுடியாதுபோகலாம்
ஆனல், இவளை கொன்றுவிட முடியும். ஆத்திரப்பட்டு எதையாவதுசெய்து விடாதே என்சகாக்களை இழந்துவிட்டேன் அந்த இடத்தை இட்டு நிரப்ப வேண்டியிருக்கிறது எனவே...
இளவரசி... இன்னமும் ஏன தாமதம்?
மாடஸ்டியின் விரல்கள் வளைந்து. கட்டுப போட்டிருந்த மணிக்கட்டை அழுத்தின. உள்ளே மறைந்திருந்த பேனு துபபாககியிலிருந்து .22 ரக தோட்டா ஒன்று சீறிப் பாயந்தது...
தொலைந்தான் ..கிராகதன!பேனு துபபாக்கியிலிருந்து தோட்டா வெளிபபட்டதில உன்கையில சிராயபபு ஏதும் ஏற்பட்டதா?
இல்லை...!உங்களுடைய புதுமையான கண்டுபிடிப்புநம்மை காப்பாற்றிக் கொள்ள, தருணத்தில் கைகொடுத்தது'


முதலில், நம் தோழர்களுககு தகவல் அனுப்புகிறேன்...
ப்ராங்க் ப்ரேட்டுக்கும் நிமியோ வுக்கும் செய்தி எட்டியது...
இதோ... பத்து நிமிடத்தில் அங்கே வந்துசேருகிறோம். ...வில்லி!
காவல் நிலையத்திற்கு வெளியே —
ரொட்டிக் கடைக்காரன் அவர் களுடைய கையாள் — அப்புறம் வேறுயாரெல்லாம்...?
தெரியவில்லை. கார்வின்போனில விஷயத்தை மிக சுருக்கமாக கூறினார் ஆனால் மொத்தத்தில் மூனறுபேர் இறநது கிடக்கிறார் களாம்!
மாடஸ்டியை அவர்கள் கொன்று விட முனைந்த தருணத்தில போய் சேர்ந்திருக்கிறார் கார்வின்...! பார்த்துககொணடு சும்மா இருப்பாரா?
ஆனால் துப்பாக்கியின்றி மூவரை வீழ்த்துவது சாத்தியமா?
தலைவனை மாடஸ்டி சுட்டுக் கொனறிருககிறாள்! கையில காயம்—அதனாலதானகட்டு என்பதெலலாம ஏமாறறு வேலை! கட்டுக்குளளே பேனா துப்பாக்கி ஒளிந்திருக்கிறது!
மரண இயந்திரத்தின் அமைப்பு இயங்கும் விதம் தொடர்புடைய நபர்கள, வாடிககையாளர்கள் போனற அனைத்து விபரங்களும் அந்த பைலகளில உள்ளன — பராங்க்!


மற்ற பாதிரிமார்கள் நாளை காலை விழித்தெழுமுன் இந்தஇடத்தை சுத்தம் செய்து விட வேண்டும் . உடனே சாச் மேலிடத்துக்கு போன் செய்து இங்கே பொறுப் பேற்க, வேறொரு நபரை தாமத மின்றி அனுப்பிவைக்கச் சொல்லுங்கள்!
அதையெல்லாம் நாங்கள் பார்த்துக் கொள்கிறோம், மாடஸ்டி! உனக்கு ஓய்வும் தூக்கமும் தேவை— போலீஸ் நிலையத்துக்கு பின்புறம் சிறிய விடுதி ஒன்று இருக்கிறது! உடனே காரில் கிளம்பு!
குளிர் தாங்காமல் நீ நடுங்குவதுதெரிகிறது இந்தா இதை போர்த் திக்கொள், இளவரசி!


வாசகர்கள் எதிர் பார்த்த லயன் காமிக்ஸ் முதல் பவனி என்பதை தெரிவித்துக்
ஆவலுடன் ஜூனியர் 1 - 1 - 87 வர இருக்கிறது! மகிழ்ச்சியுடன் கொள்கிறோம்!
ஜூனியர் லயன் காமிக்ஸ்!
சிவகாசி.


இரத்தக் கண்ணீர்!
நண்பர்களாலும் எதிரிகளாலும் 'பயங்கர முதலை' என்று பட்டப் பெயரிட்டு அழைக்கப்பட்ட கமாண்டர்வான்ஸ் நெய்டரின் உத்தரவின் பேரில் பிரான்ஸின் வடபகுதியிலிருந்த ஒரு கிராமம் தீக்கிரையாக்கப்பட்டது...
எங்களை எதிர்த்துத் தாக்கி வரும் பிரெஞ்சு சக்திகளுக்கு ஒத்தாசை செய்ய முற்பட்டால் என்ன பரிசு கிடைக்கும் என்று இனியாவது மற்றவர்கள் பாடம் கற்றுக்கொண்டால் சரிதான்... என் வீரன் ஒருவன் செத்தால் உங்களில் ஐவரைக் கொல்வேன்;


இப்படி நேர்ந்ததே என்று எனக்கு ஏற்படும் வருத்தம் கொஞ்ச நஞ்சமல்ல...! அனாதைகளாகிவிடும் சின்னஞ்சிறு குழந்தைகளின் பரிதாப எதிர்காலத்தை எண்ணி ஒவென்று கதறியழுகிறது என் நெஞ்சம்...
கோழிக் கறி அருமை!
'பயங்கர முதலை' என்று சரியாகத்தான் பெயர் சூட்டியிருக்கிறார்கள்.. பயல் என்னமாக முதலைக் கண்ணீர் வடிக்கிறான்!
சில தினங்களுக்குப் பின், அருகே இருந்த ருயின் நகரில் ஒரு வீட்டின் கதவை தட்டினான் இரும்புக் கை நார்மன் — பிரிட்டிஷ் உளவாளி!
நகரிலுள்ள ஜெர்மானியர்கள் எல்லோரும் வந்து போகும் ப்ளூ ரஞ்சல் மதுபானக் கடை உதவியாளன் நீ — இல்லையா...?
ம்... ஆமாம் — ஆனால் வந்து இதையெல்லாம் நீ...


இன்றிரவு உனக்கு உடல அசௌகரியம் ஏற்பட்டு விடுகிறது. எனவே, உனக்குப் பதிலாக உன் மச்சான் ஜாக்குவிஸ் இன்றிரவு வேலைக்கு வருவான் என்று ஒரு சீட்டெழுதிக் கொடு...! என்ன விழிக்கிறாய் — நான்தாண்டா உன் மச்சான் ஜாக்குவிஸ்... இன்னும் புரியவில்லை?
உன்னை எனக்கு முன் பின் தெரியாது — அத்தோடு, நான் நல்ல ஆரோக்கியத்தோடுதான் இருக்கிறேன்!
ஜெர்மன் போர் முகாம் ஒன்றில் நார்மன் சித்திரவதைக்குள்ளானபோது அவனுடைய வலது கை படுமோசமாக சிதைக்கப்பட்டதையடுத்து இரும்பினாலான செயற்கைக் கரத்தைப் பொருத்திக் கொண்டிருந்தான்... அந்த இரும்புக் கை இப்போது மின்னல் வேகத்தில் முன்னால் நீண்டது...
நலமாகத்தான் இருக்கிறாயா — இப்போது சொல்!
ஊய்ய்...ய்! இல்லை... உடல்நிலை படுமோசமாக இருக்கிறது - ஜாக்குவிஸ் மச்சான்!


கொண்டுவிட்டாய்— புத்திசாலி! ஆனல், இந்த இரகசியத்தை ஜெர்மானியர்களுக்கு தெரிவிக்க நீ நினைத்தால், அதற்கு முன் என் முகத்தை சற்றே உற்றுப் பார்...
குரூரம் கொப்பளிக்கிறது...! இவன் ஒரு ஈவிரக்கமற்ற கொலைகாரன்...!
நா நா... நான் வாயைத் திறக்க மாட்டேன் — என்னை நம்பு... மச்சான்!
அடுத்து—
BLUE ANGEL
ஜெர்மானிய ஆக்ரமிப்பிலுள்ள பிரெஞ்சு கடலோர நகரமான டியப்பில் கமாண்டோ தாக்குதல் ஒன்று நடத்த திட்டமிட்டிருக்கிறது நேசநாடுகள், இங்கே ஜெர்மானியர்களின் படைபலம் எப்படியிருக்கிறது என்று கண்டறிய வேண்டும்! வான்ஸ் நெய்டர்தான் இங்கே பொறுப்பதிகாரி, உடனடியாக அவனை சந்திக்கப் போகிறேன்...!



நைட் கிளப்பினுள் —
ம்... ஊற்றிக் கொடு — வழக்கமான சரக்கை...!




ஒரு மணி நேரம் கழித்து—
சே... ரொம்ப மோசமான நாள் இது— கைதிகளை ரொம்ப துன்புறுத்த வேண்டியிருந்தது. சனியன்கள் ஓலம் இருக்கிறதே... அதைக் கேட்டதிலிருந்து என் மனம் எப்படி சோர்ந்து கிடக்கிறது தெரியுமா...?
நாஜி சண்டாளனே! உனக்கு சமாதி கட்டுகிறேனா இல்லையா என்று பார்!


இரண்டு மணிநேரம் கழித்து—போதை உச்சத்தில்!
இன்னும் நிறையக் கண்ணீர், நான் வடிக்க வேண்டிய நிர்ப்பந்தம் விரைவிலேயே ஏற்படப்போகிறது... நேசநாட்டுப் படைகள் டிப்பே கடற்கரையோரமாக வந்து இறங்கும் போது, நாங்கள் பதிலடி கொடுக்க ஆயத்தமாகி வருகிறோம்...
சுவாரஸ்யமான விஷயமாக உள்ளதே கமாண்டர்!


மூன்று மணி நேரம் கழித்து—
டட்டடாய்ங்... டட்டடாய்ங் அதோ வருகுது நேசநாட்டுப் படை புகுந்து விளையாடுங்கள்... அடித்து நொறுக்குங்கள் டட்டடாய்ங்... டட்டடாய்ங்.
வ்வுரும்...வ்வுரும்...


எனக்குத் தேவையான தகவல்களை உளறிக் கொட்டிவிட்டான்... ஜெர்மானியர்களின் பதிலடி தாக்குதல் பற்றிய பிளான் அவனுடைய வீட்டில் ஒரு பாதுகாப்பு பெட்டகத்தில் இருக்கிறது... எனக்கு இந்த தகவல் போதும்!
நாஜியின் வீட்டுக்கு வெளியே—
இரண்டு காவலாளிகள் மட்டுமே இருக்கிறார்கள்... கூடுதலாக இன்னும் சில ஜெர்மானியர்களை கொல்ல சந்தர்ப்பம் அமைந்திருந்தால் எத்தனை நன்றாக இருந்திருக்கும்!



F-3.


இரும்பு கை போதும்— வேறு ஆயுதம் எதுவுமே தேவையில்லை!
உள்ளே—
முதலையின் படைப்பிரிவுக்குரிய சின்னமான ஸ்வஸ்திக் போன்ற அமைப்பில் நான்கு கோடரிகள்...! ஹாட்லரின் புகைப்படத்தின் பின்னே இருக்கிறது இரகசிய பெட்டகம்...


ஒரு நிமிடம் கூட தாக்குப்பிடிக்காத இதுவெல்லாம் ஒரு பெட்டகமாம்— தூ.. ! இதோ இருக்கிறது நான் தேடிவந்த பிளான்!
நான் எதிர்பார்த்ததைவிட பயங்கரமாக இருக்கிறது... இங்கே வரும் நேசநாட்டு படைகளின் பலம் என்னவென்று ஜெர்மானியர்கள் சரியாக தெரிந்துவைத்திருக்கிறார்கள்— அவர்களுடைய வரவை எதிர்பார்த்து இங்கே எல்லாமே தயார் நிலையில் உள்ளன...
உடனே பிரிட்டனுக்குத் திரும்பி ஜெர்மானியர்களின் சூழ்ச்சித் திட்டத்தை எடுத்துக் கூறி அவர்களை நான் எச்சரிக்க வேண்டும்...


பெட்டகத்தின் கதவை சற்று கூடுதலாக திறந்ததும்...
தொலைந்தேன்... சூட்சும வெடியமைப்பு —
ஆவ்—!


இப்படி மின்னல் வேகத்தில் விலகிக் கொள்ளாமல் சற்று தாமதித்திருந்தேன் என்றாலும் அந்தத் தோட்டா என் மூளையை சிதற அடித்துவிட்டிருக்கும்! இப்போது நெற்றியில் லேசான சிராய்ப்போடு போயிற்று. —ம்... என் டார்ச் விளக்கை எங்கே வைத்தேன்?
தூத்தேறி... இந்த அறை ஒரே கும்மிருட்டாக கிடக்கிறது— விளக்கும் எரிந்து தொலைக்க மாட்டேனென்கிறது!


சில விநாடிகளுக்குப் பின்னரே உண்மை நிலவரம் நார்மனுக்கு உறைத்தது —
இரத்தக் கண்ணீர்... நெற்றியை உராய்ந்து சென்ற அந்தத் தோட்டா ஒரு முக்கியமான நரம்பை பாதித்து விட்டிருக்கிறது... என் பார்வை போய்விட்டது...
நானொரு முட்டாள்... ஒரு உளவாளி செய்யலாமா இந்தப் பிழையை? ஹூம்... சிறுபிள்ளைத்தனமாக எதிரியின் பலத்தை குறைவாக மதிப்பீடு செய்ததற்கு கிடைத்த பலன் இது!
ஆனால் நான் எப்படியும் பிரிட்டனுக்கு உடனே திரும்பியாக வேண்டும்... இல்லையேல் பத்தாயிரம் வீரர்கள் கடற்கரை மணலில் செத்து விழுவதை தவிர்க்க முடியாது!
ஒதுக்குப்புறமாக இருந்த ஒரு வீட்டின் கதவைத் தட்டினான் நார்மன்
உடனடியாக நான் கடலோரம் செல்ல நீங்கள் உதவி செய்ய வேண்டும்... நேசப் படைகளின் பாதுகாப்பு சம்பந்தப்பட்ட அதிமுக்கிய தகவல் என் வசம் இருக்கிறது!
ஆனால்... உனக்கு உதவி செய்ய அச்சமாக இருக்கிறது ஏனெனில்—


உதவப் போகிறீர்களா... இல்லை நான் வெறித்தனத்தைக் காட்டவா?
இவனுக்குப் பார்வை கிடையாது!


உனக்கு நிச்சயமாக உதவுகிறோம் நண்பனே ...! இந்த ஜெர்மானியர்களை நானும் என் மனைவியும் எப்படி வெறுக்கிறோம் தெரியுமா... வாழ்க பிரான்ஸ்!
வாழ்க பிரான்ஸ்... ஒழிக— ஜெர்மானியரின் அட்டகாசம்!
ஜெர்மன் கமாண்டருக்கு போன் செய் ....போ


இம்முறை சிக்கலில் மாட்டிக் கொண்டு விட்டாயா பயலே! தாமதமின்றி நீ பிரிட்டன் சென்று நேசப்படையினரை எச்சரிக்கத் தவறினாயோ டிப்பே கடற்கரையில் நடக்கப் போகும் படுகொலைகளை தவிர்க்க முடியாது போய்விடும்!
நேரம் போய்க்கொண்டிருக்கிறது... இவர்கள் என்னதான் செய்கிறார்கள்— கதவு வேறு வெளியே தாழிடப்பட்டிருக்கிறது!
சதிகார நாய்களா... என்னையா ஏமாற்றப் பார்க்கிறீர்கள்!
ஐயோ... இரும்புக் கை— ஒளிந்து கொள்ளுங்கள்!


துரோகிகளே... எங்கே ஒளிந்து கொண்டிருக்கிறீர்கள்—ம்... வாருங்கள் வெளியே!
பிரிட்டிஷ் உளவாளியை உயிரோடு பிடித்துக் கொண்டு வருமாறு உத்தரவிட்டிருக்கிருர் கமாண்டர்—பயலுக்கு பார்வை கிடையாது... வெகு சுலபமாக மடக்கிவிடலாம்!
வெளியே, காலடியோசைகள்—ஜெர்மானியர்களா... பிரஞ்சுக்காரர்களா... தெரியாது எனக்கு!


ஆனால் நீங்கள் யாராக
இருந்தாலும் இதுதான் நான்
தரும் வரவேற்பு!
ஆ ஆ... வ்!


ஹே... வழக்கமான பாணியில் தனியாகவே நான் எதையும் சாதிக்கவேண்டும்... யாரையுமே நம்புவதற்கில்லை. சுற்றியிருக்கும் அத்தனை பேருமே எதிரிகள்... அல்லது துரோகிகள்!
இப்போது தொடக்கும் என் வழியில் குறுக்கிடும் நபர் யாராக இருந்தாலும் இதுதான் பதில்... பத்தாயிரம் பேரை காப்பாற்ற இப்படி சிலபேரை பலி கொடுப்பதில் தப்பேயில்லை!


அடுத்த நான்கு தினங்களில், கிடைத்ததை உண்டு பெரிய சாலைகளை தவிர்த்து. தட்டுத் தடுமாறியவாறு குன்றுகளினூடேயும், காட்டுப் பகுதியை ஊடுருவியும் நடந்தான் இறுதியில்...
விரல்களால் தடவிப் பார்த்து படிக்க முடிகிறது, கடற்கரையோரப் பகுதி இன்னும் 5 கி. மீ. தொலைவில் தானிருக்கிறது. அங்கிருந்து சப் — மரீனில் பிரிட்டன் போய்விடலாம்.
அடுத்து—
பீட்ரூட் கிழங்கு— கடந்த நான்கு நாட்களாக எனக்கு உணவாக கிடைத்துவரும் ஒரே பண்டம்... ஹே— அதென்ன சப்தம் .?
அந்த சப்தம் — மிக ருசியான சமாச்சாரம்... அருகே எங்கோதிரிகிறது!


அதோ... நாம் தேடி வந்த ஆள்!
குருட்டுப் பயலிடம் முதலில் கொஞ்சம் தமாஷ் செய்யலாம்—
என் அருமை கோழியே... அருகே வா— அப்பப்பா நாக்கில் என்னமாய் நீர்ஊறுகிறது! எங்கே இருக்கிருய்... நீ—
கெக்...! கெக்...! கெக்!


கெக் .! கெக்...! கெக்...!
இதோ இங்கே இருந்துதான் சப்தம் வருகிறது... எட்டிப் பிடித்துவிடலாம் .. ஆகா—
இதோ ஃபோர்க்கை கையிலெடுத்துக் கொண்டுவிட்டேன்... இனி வாருங்களடா நாய்களா!
ஆ...!


நாற்றமடிக்கும் நாஜி பன்றிகளே...!
நான் குருடனாக இருக்கலாம்...
ஆனால் முட்டாளில்லை!
மடேர்!
சத்!


கடல் அலையின் இரைச்சல் கேட்கிறது. இலக்கை சம்பித்துவிட்டேன்!


ஆனால் அதற்கு மேலும் அதிர்ஷ்டம் நார்மனுக்கு துணைவரவில்லை...
நெருங்கிவிட்டேன்... முயற்சியில் வெற்றி பெற்று விட்ட மாதிரிதான்!



அடித்துவீழ்த்தப்பட்ட நார்மன், கமாண்டர் வான்ஸ்நெய்டரின் முன்னல் கொண்டுவரப்பட்டான்...
அடடா... உனக்குப் பார்வை போய்விட்டதா! எங்கே போகிறேம் என்று கூடத் தெரியாமல் இப்படி சாமான்களின் மீது இடறிக் கொண்டு படுபயங்கரமாக பல்டியடிக்கிருயே— ஐயோ... பாவம் ச்சொ...!
ஊப்...ப்!
அந்தக் கொடியவனின் கண்ணிலிருந்து ஒரு துளிக் கண்ணீர் வடிந்தது...
வரப்போகும் நேசப்படைகளை தகுந்த முறையில் வரவேற்க எல்லா ஏற்பாடுகளும் ரெடி... என்றைக்கு வரவிருக்கிருர்கள் என்ற விஷயத்தை மட்டும் உன்னிடமிருந்து கறக்கவேண்டியிருக்கிறது. பார்வையற்ற துரதிர்ஷ்டசாலியை துன்புறுத்த நான் விரும்பவில்லை...
அதே வேளையில், தெற்கு கடலோர பிராந்தியத்தில், நார்மனின் பாஸ்— பிரைட்— வேறொரு உளவாளியிடம் பேசிக்கொண்டிருந்தார்...
துருப்புகள் புறப்பட ஆயத்தமாகி விட்டனர்... நார்மனிடமிருந்து செய்தி ஏதுமில்லை எனவே, டிப்பேயில் ஜெர்மானியர்களின் படை பலம் அப்படியொன்றும் குறிப்பிடும் அளவில் இராது என்று தீர்மானமாக சொல்லிவிடலாம்.
ஆமாம் ஸார்... அப்படி ஏதாவது விபரீதமான சூழல் அங்கே உருவா வந்தால் உயிரை பணயம் வைத்தாகி நமக்குச் செய்தியனுப்பிவிடுவான் நார்மன்— அவனை நாம் நூற்றுக்கு நூறு நம்பலாம்!


அங்கே—
சொல்லப் போகிறுயா... இல்லையா!
தொலைந்து போடா... சனியனே! ஆஆ...!
ணங்!


ரொம்பவும் அழுத்தக்காரனாக இருக்கிறாய்... உன்னைப் பேச வைக்க என்ன செய்யவேண்டும் என்று எனக்குத் தெரியும்!
கடைசியாக நீ கொடுத்த உதை, எனக்கு நீ செய்த உபகாரமடா வெறி நாயே! இழந்த பார்வையும் கொஞ்சம் கொஞ்சமாக மீண்டு வருகிறது. இந்த மின்சார வயரை நான் இழந்துவிட்டால்...


கணக்கு நேராகிவிட்டது... என்னைப் போலவே உன்னாலும் எதையுமே பார்க்க முடியாது இப்போது!
ஏய்... என்ன இது?
மரண பீதிஏற்பட்டு வியர்த்துக் கொட்டுகிறதா உனக்கு? பார்வையற்ற ஒருவன் கும்மிருட்டைச் சாதகமாக்கிக் கொண்டு உன்னைக் கொன்று பழிதீர்த்துக்கொள்ள நெருங்கி வருகிறான்...!


ஆ ஆவ்...!
விரைந்து நான் ஊர் திரும்ப வேண்டிய அவசரம் ஒருபுறமிருக்க உண்டு இல்லை என்று உன் கணக்கை முதலில் தீர்க்க வேண்டிய அவசியமும் இருக்கிறது!
நாஜி கமாண்டர் தன் படைப்பிரிவு சின்னத்தை கையிலெடுத்துக் கொண்டான்...
இந்த ஸ்வஸ்திக் சின்னம் என்னை இப்போது காப்பாற்றும்!


செத்துத் தொலை!
இதோ— இம்முறை நீ தப்பவே முடியாது!
திருப்பித் தாக்க ஏதாவது கிடைத்தால் தேவலாம்— அட... இந்த டப்பாவினுள் என்ன இருக்கிறதோ... தெரியவில்லையே!
ஏதோ ஆஸிட் நெடி அடிக்கிறதே— இது போதும்...


இன்னும் இரண்டு
கோடாரிகள
கைவசமிருக்கின்றன...
ஆ ஆ ஆவ்...!
நாஜியின் மாற்று சீருடையை
எடுத்து அணிந்து கொண்டு
வீட்டைவிட்டு வெளியே
வந்தான் நார்மன்...
நான் விரைந்து பிரிட்டனுக்கு
திரும்பவேண்டும். டிப்பேயில்
நேசப்படைகள் அதிரடி தாக்குதலாக
நடத்த திட்டமிட்டிருக்கும் இரகசியம்
ஜெர்மானியர்களுக்கு தெரிந்துவிட்டிருக்கிறது
என்று எச்சரிக்கவேண்டும்.
8


சாலையை வந்தடைந்த நார்மன் அவ்வழியே சென்று கொண்டிருந்த ஒரு காரை கை நீட்டி நிறுத்தினன்...
என்னுடைய கார் பழுதுபட்டு நின்று விட்டது. எனக்கு செர்போர் வரை 'லிப்ட்' கொடுக்க முடியுமா... நண்பர்களே ப்ளீஸ்!
ஓ... தாராளமாக!


பின்னர்—
சை... இருட்டடிப்பு செய்யப்பட்டிருப்பதால் நிதானமாக 30 மைல் வேகத்தில் ஊர்ந்து கொண்டிருக்கிறது கார்... எந்த நேரமும் அபாய சங்கு ஊதப்படலாம். டிரைவரின் பேராசையை தூண்டி காரியத்தை சாதிக்க முயற்சிக்கப் போகிறேன்...


...கமாண்டர் ஸார் உங்க கார் 'ஓபல்'— இல்லையா? அது சரிப்பட்டு வராது உங்களுக்கு— பேசாமல் இதுமாதிரி மெர்ஸிடஸ் வாங்கிவிடுங்கள் — ஜம்மென்று போகும்!
உன் காரை நீதான் மெச்சிக்கொள்ள வேண்டும்... இங்கிருந்து செர்போருக்கு இடையேயுள்ள எண்பது மைல் தொலைவை ஒரு மணி நேரத்தில் கடக்குமா உன் கார்? ஆயிரம் ரைச்மார்க்குகள் பந்தயமாக வைக்கிறேன்!


டிரைவரின் கண்களில் பேராசை கொப்பளித்தது.
பார்த்துவிடலாம் .. பந்தயத்தை ஏற்றுக்கொள்கிறேன்! பணத்தை எடுத்து தயாராக வைத்துக் கொள்ளுங்கள் கமாண்டர் ஸார்!
இதற்கிடையே அங்கே—
ஸார்... உங்கள் முகம் ஏன் இப்படி காயம்பட்டிருக்கிறது படுபயங்கரமாக..!
அதைப்பற்றி அலட்டிக் கொள்ளாதே... உடனடியாக சாலையில் தடைகளை வைக்க தகவல் அனுப்பு... அந்த இருப்புக் கை சைத்தானை எப்படியேனும் தடுத்து நிறுத்தி கைப்பற்றியாக வேண்டும்... ம்... ஓடு சீக்கிரம்!
விலகி அப்பால் போங்களடா போக்கிரிப் பசங்களா— நான் எப்படியேனும் பந்தயத்தை வென்றாக வேண்டும்
ஆவ்...!


எதிரே சாலையில் தடை எழுப்பப்பட்டிருக்கிறது. வில்பர்ட் வண்டியை நிறுத்து!
நீ பந்தயத்தில் தோற்பது நிச்சயம் என்றாகிவிட்டது... நண்பா!
இல்லை— நான் வண்டியை நிறுத்தப் போவதில்லை...! விளக்கம்— பிறகு கூறிக் கொள்ளலாம்! இப்போது என் குறிக்கோள்— வெற்றி... வெற்றி— பந்தயத்தில் வெற்றி பெறுவது ஒன்றுதான்!
ஆவ்... வ்!


அதையடுத்து, சாலை வளைவுகளில் கூட காரை முதுகுத்தண்டு ஜில்லிட்டுப் போகும் படியான அசுர வேகத்தில் திருப்பி ஓட்டிக் கொண்டு போனான்...
செர்போர் விளக்குகளின் வெளிச்சம் தென்படத் தொடங்கிவிட்டது... இன்னும் பத்து நிமிட அவகாசம் இருக்கிறது. எனக்குச் சேரவேண்டியதை இப்போதே நீங்கள் கொடுத்துவிடலாமே!
ஓ... தாராளமாக! இந்த பின்பகுதி கதவு அத்தனை உறுதியானதாக இல்லை— எனவே, நீங்களிருவரும்...


வெளியே போங்கள்!
ஐயோ..!


இந்தா உனக்கு சேரவேண்டிய பரிசு— நான் என் இரும்புக் கையை பிரயோகிக்காததற்கு நீ நன்றி சொல்லவேண்டும்... நண்பனே!
உப்ப்...ப்!
துருப்புகள் ஏற்கனவே கிளம்பிச் சென்றுவிட்டன... இனி அவர்கள் வருவதை எதிர்கொள்வதை தவிர வேறு வழியில்லை...
ாத்துக் கொண்டிருந்த சப்—மரீன் லம் பிரிட்டன் சென்றடைந்த ார்மனுக்கு ஏற்கனவே பார்வைத்திறன் முழுவதுமாக திரும்பி வந்துவிட்டிருந்தது...
உன் பணியை செவ்வனே செய்து முடித்து திரும்பி வந்திருக்கும் உனக்கு என் பாராட்டுக்கள்... ஆனால், அதிரடி தாக்குதலை வாபஸ் பெறமுடியாதவாறு காலம் கடந்துவிட்டது, இப்போது!
ஹும்... இதை என்னிடம் சொல்லாதீர்கள்! விரைவிலேயே விதவைகளாகி இரத்தக் கண்ணீர் வடிக்கப் போகும் நூறுயிரம் அபலைகளிடம் போய் சொல்லுங்கள்— உங்கள் கையாலாகாத்தனத்தை!
'ன சொல்கிறீர்கள்? என் அறிக்கையை சரிவர படிக்கவில்லையா... நீங்? ஜெர்மன் படையில் பாதி நம்வீரர்களை எதிர்பார்த்து அங்கே காத்துக்கொண்டிருக்கிறது!



### ஆசிரியர் குறிப்பு:-

நார்மனின் கணிப்பு நிருபணமாகிவிட்டது.
உலக மகா யுத்தத்திலேயே படு பயங்கரமானதொரு அம்சமாகிப் போனது, டிப்பேயில் நடந்த அந்த தாக்குதலில் விளைந்த உயிர்ச் சேதம்!
இரகசியமானதொரு அதிரடித் தாக்குதல் என்று திட்டமிட்டுச் சென்ற ஆங்கிலோ— கனடியன் போர்ப்படைப் பிரிவை எதிர்பார்த்து தயார் நிலையில் காத்துக் கொண்டிருந்த ஜெர்மன் படைப் பிரிவு விளைவித்த நாசம்... அப்பப்பா... பயங்கரம்!
நேசப்படைபிரிவிலிருந்து ஐந்தாயிரம் வீரர்களில் சுமார் மூவாயிரம் பேர் கண்ணிமைக்கும் பொழுதில் அந்தக் கடற்கரை மணலில் பிணமாகி விழுந்த கொடுமையை வார்த்தைகளில் வடிக்க இயலாது!

**முற்றும்.**

# தவளை எதிரி


குற்றவியலில் அரும் பெரும் சாதனைகளை நிகழ்த்திய ஸ்பைடர், பின்னர் மனமாற்றமடைந்து,சட்ட ஒழுங்கைப்பராமரிப்பதில் காவல்துறையினருக்கு உதவி செய்வது என்று தீர்மானித்து அவ்வழியில் செயல்பட்டுக்கொண்டிருந்த சமயம்—
இன்றைக்கும் நகரில் சமூகவிரோத சம்பவம் ஏதும் நிகழவில்லை விஷமம் பண்ணத்தைரியமின்றி சமூக விரோதிகள் தலைமறைவாகி பதுங்கிக்கிடக்க காரணம் ஸ்பைடரிடம் அவர்களுக்குள்ள அச்சம்தான்!



தன் வலைத்துப்பாக்கி வெளிப்படுத்திய பட்டுப் போன்ற ஆனால் எஃகையும்விட உறுதியான இழைகளைப் பற்றித்தொங்கியவாறு ஜன்னல் வழியாக தன் பாசஅறையினுள் நுழைந்தான் ஸ்பைடர்...
...அட்டகாசமாக எதையாவது செய்து சாகஸம் நிகழ்த்தவகையில்லாமல் சே...ஒரே போர்!
வேலை ஏதும் இல்லாததால் சொகுசாக சாய்ந்து சுகம் அனுபவித்துக்கொண்டிருந்தனர் புரபஸர் பெல்ஹாமும், ஆர்டினியும்...
ஹலோ.. பாஸ்! போலீஸ உயர் அதிகாரி சாண்டர்ஸன் உங்களை பார்க்க விரும்புவதாக தகவல் அனுப்பியிருக்கிறார்... ஏதாவது ஒரு உருப்படியான பணியில் ஈடுபட வாய்ப்பு கிடைக்கலாம்!
குற்றத்தடுப்புக் காட்சியகம் திறப்புவிழாவிற்கு நாளை நீங்கள் வழக்கம்போல் ஹெலி-காரில் வருகிறீர்களா அல்லது அவரது காரை அனுப்பவேண்டுமா என்று மேயர் அறிய விரும்புகிறார்...!



வேறு வேலை ஏதும் இல்லையாதலால் போலீஸ் உயர்அதிகாரி சாண்டர்ஸனைசசந்திக்க உடனடியாக புறப்பட்டுச சென்றான் ஸ்பைடர்
நமக்கு ஓர் அச்சுறுத்தல் கடிதம் வந்திருக்கிறது ஸ்பைடர் எழுதியவன்கடிதத்தை 'செய்திமுழக்கம்' பத்திரிக்கை ஆசிரியர் டெவ்லினுக்கு முகவரியிட்டு அனுப்பி வைத்திருக்கிறான்... டெவ்லினை உனக்கு ஏற்கனவே தெரியுமல்லவா
துரதிர்ஷ்ட வசமாக - ஆமாம்! என்னுடையமதியூகத்தினாலும்வியத்தகு செயலாற்றலாலும் நான ஈட்டிய வெற்றிகளை மட்டம் தட்டும் வகையில் ஏதோ அதிர்ஷ்டம் என் பங்கில் இருந்தால்தான் அவை எல்லாம் சாத்தியமாயிற்று என்று எழுதிய அகம்பாவக்காரனல்லவா இந்த டெவ்லின்!
பரிகசிக்கும் தொனியில் பேசலானார் டெவ்லின்...
எழுத்து சுதந்திரம் உள்ளநாடு இது ஸ்பைடர்! நீ பெரிய கில்லாடி என்பதாக பாசாங்கு பண்ணிக்கொண்டு அலைகிறாய் அதைநான் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பதில்லை -, புரிந்துகொள்!
நீ தான் வேஷம் போடுகிறாய்... 'ஸ்பைடரின் வெற்றி இரகசியம்' என்ற தலைப்பில் என் அனுபவங்களை உன் பத்திரிக்கைககுஎழுதித் தர நான்மறுத்துவிட்ட ஆத்திரத்தில்இப்படி தூற்றி எழுதுகிறாய்... எப்படி வேண்டுமானாலும் எழுதித்தொலை எனக்கு அக்கறை இல்லை 'வந்தகடிதத்தில் என்ன எழுதியிருக்கிறது- கொடுங்கள் பார்ப்போம்!



ஒரே மூச்சில் கடிதத்தைப் படித்து முடித்த ஸ்பைடர் சீறினான்
சுத்த பைத்தியக்காரத்தனம்! 'எறும்பு' என்று தன்னை சொல்லிக் கொள்ளும் ஒரு போக்கிரி நூறுமில்லியன் டாலர் தரப்பட வேண்டும் அல்லது இந்த நகரத்தை அழித்துவிடுவதாக பிதற்றியிருக்கிறான். இதைப்போய் நீங்கள் பெரிதுபடுத்திக்கொண்டு-சே...
எதிலுமே உனக்கு அலட்சியம் ஸ்பைடர் எண்ணிப் பார். ஒருவேளை இந்தமிரட்டல் உண்மையானதாக இருந்துவிட்டால்...?
ப்பூ ! ஸ்பைடரின் கணிப்பு என்றைக்குமே தவறிப்போனதில்லை! இந்த விஷயத்தை இப்படியே மறந்துவிட்டு நிம்மதியாக இருங்கள்! நாளை நான் குற்றத்தடுப்புகட்சியகத்தை திறந்து வைக்கப்போகும் விழாவுக்கு கட்டாயம் வருவீர்கள் என்று எதிர்பார்க்கிறேன்!
ஆமாம்... ஆமாம் நகரத்திலுள்ள அத்தனை முக்கிய பிரமுகர்களும் அங்கே வரும்போது பாதுகாப்பு பொறுப்பேற்க நான் வரத்தவறினால்பேர்ச்சு



F-4


மறுநாள் ..
ஸ்பைடரிடம் அபிமானம்கொண்டபணக்காரர் ஒருவர் நன்கொடையாக அளித்த இந்த பிரம மாண்டமான காட்சியகம் இன்னும் சிறிது நேரத்தில் திறக்கப்பட ஹா-அதோஸ்பைடரே வந்துவிட்டார் தன் ஹெலி-காரில் ..
புது மெருகோடு பளபளத்த அந்தக்கட்டிடத்தைப் பார்த்து திருப்தியடைந்தான் ஸ்பைடர்...
எனக்குப்பெருமைசேர்க்கும் நினைவுச்சின்னம்தான் இது சந்தேகமேயில்லை ..
தலைகனம் பிடித்தலையும் இவனுக்குபாடம்கற்பிக்க வேணடும!



எதையுமே புதுமையாகச் செய்ய வேண்டும் என்று எண்ணுபவர் நீங்கள் என்பதால் திறப்புவிழா நடவடிக்கையிலும் ஒரு சிறு புதுமையை புகுத்தியுள்ளோம் அதோ அந்த மையப்புள்ளியை குறிவைத்து நீங்கள் சுட்டால் கதவுகள் தானகவே திறந்து கொண்டு விடும்...!
நல்ல கற்பனை... ஸ்பைடரின் குறி என்றைக்குமே தவறிய தில்லை... இதோ-
இந்த மியூஸியத்தை திறந்து வைப்பதில் பெருமையடைகிறேன்!
ஆனல் தோட்டா தன் இலக்கைப் போய் தொட்டமாத்திரத்தில்-
ஆ... வ்! கட்டிடம் சரிகிறது!
மியூசியத்தையே இடித்து விட்டேனே!
சே என்னமாக அட்டகாசம் பண்ணுகிறன்?


மேற்கூண்டு இப்பக்கமாக விழப் போகிறது வீதியில் அப்படியே நின்றுகொண்டிருக்கிறார்கள் ஜனங்கள்!
ஆ ஆ ஆ


ஓ...ஓ...ஓடுங்கள்!
ஜெட் அமைப்பை முழுத்திறனில் இயக்கி சரிந்து விழும் கூண்டின் வேகத்தை ஓரளவு மட்டுப்படுத்தலாம்.






ஸ்பைடரின் சமயோசிதத்தால் உயிர்பலி தவிர்க்கப்பட்டது.
இப்படியொரு விபரீதம் நிகழ காரணம் என்ன என்றுதான் விளங்கமாட்டேனென்கிறது..
படார்!
ஹா..ஹாஹ்ஹா? மியூசியத்தை திறந்துவை என்றுசொன்னால் அதைஇடித்துத்தள்ளிய புத்தி சாலியைப்பாருங்கள்...!
குழப்பத்தோடு தன் பாசறைக்கு திரும்பி வந்துகொண்டிருந்தான் ஸ்பைடர்...
.பக்கத்து கட்டிடத்துக்கு யாரோ புதிதாக குடி வந்திருக்கிறார்கள் பாஸ்
இன்னும் ஒரு சுவர்மட்டுமே பாக்கி வேலைமுடிந்த மாதிரி தான்... ஸார்!
இதுமாதிரி விநோதமான அமைப்பில் நிர்மாணிக்கப் பட்டிருக்கிறவீட்டைவேறு எங்குதேடினாலும்காணமுடியாது!


கட்டிடத்தின் எல்லா சுவர்களின்மீதும் தொடர்ந்துநீரைப்பீச்சிக்கொண்டிருகக ஏற்பாடு செய்துகொண்டிருக்கும் பித்துக்குளியாரென்று தெரியவில்லை..
தொடர்ந்து எப்போதும் கட்டிடத்தின்மீது மழை பெய்துகொண்டிருப்பது போல் ஜிலுஜிலுவென்று சுகமாகஇருககிறதுஇங்கே நாம் ரொம்ப சொகுசாக வாழலாம் பாஸ்...!
உள்ளே -
சொகுசாக மட்டுமில்லை இங்கே படோ படமாகவும் புகழோடும் வாழப்போகி றோமடா...பொடியா! நாம் இங்கே தங்குவதற்கு வேண்டிய சகலவசதிக ளையும் செய்துகொண்டாயிற்று இனி நம்முதல் இலக்கான ஸ்பைடர் மீது கவனத்தை செலுத்த வேணடும்!


மியூஸியகட்டிடம் இடிந்து விழுந்த மறுநாள்... திடீரென்று—
அங்கேபார்! பாலம் அப்படியே சரிந்து விழுகிறது ..
சீட்டுககடடை வைதது குழந்தைகள் நிர்மாணிக் குமகட்டிடம் சரிவது போல்நிகழ்ந்துவிட்டதே!


இது நடந்து ஒருமணிநேரம்கழித்து—
ஆஆ வ்!பிரேக்கைப் .. போடு—
ஜாக்கிரதை....:ப்ளை ஓவரின் மத்திய பகுதி இடிந்துவிழுகிறது


அதேசமயம் நகரின் வேறொரு பகுதியில்
நம்மேலேவிழப் போகிறது— ஓடுங்கள்!
கட்டிடத்தின் அடிப்படை கட்டுமானம் சரிகிறது...




அடுத்த இரு தினங்களும் ஸ்பைடரும் காவல்துறையினரும் ஏதாவது துப்புக் கிடைக்காதாஎன்றுதேடியலைந்து தோற்றுப்போனார்கள் பின்னர்... ஸ்பைடர் சோர்வோடுதன்பாசறைக்கு திரும்பியபோது—
பாஸ் அதோ வருகிறார்...! ரொம்பவும் நொந்து போயிருப்பார் என்பதில் சந்தேகமேயில்லை!
'செய்தி முழக்கம்' நாளேட்டில் வந்திருக்கும் தலைப்புச் செய்தியைப் படித்தபின்னர் எரிமலையாக சீறப்போகிறார் என்பதும் உறுதி!
சினம் கொப்பளிக்கும் ஸ்பைடரின் முகத்தைப் பார்த்த இருவருக்கும் நடுக்கமெடுத்தது.
இதை நீங்கள் இரசிக்கமாட்டீர்கள் என்று தெரியும் ஆனாலும் படித்து தெரிந்து கொள்வது அவசியம் என்பதால் கொடுக்கிறேன்!
இதை லட்சியம் பண்ணாதீர்கள் பாஸ் நா...நாங்கள் எழுதவில்லை இதை..அந்தபன்றிப்பயல்டெவில் டெவ்லினின் வேலை இது!
''ஸ்பைடரின் திணறல்-பாச்சாபலிக்கவில்லை முடிந்தது ஸ்பைடரின் சகாப்தம்'' - என்ன கொழுப்பு இருந்தால் அந்த நாய் என்னைப் பற்றி இப்படி அவதூறாக எழுதத்துணிவான்


...தவளை மனிதன் அடுத்த கட்டிடத்தில் தான் தங்கியிருப்பதாகஎழுதியிருக்கிறது
வாருங்கள் போய் பார்த்துவிட்டு வருவோம் அசகாயசூரனை எனக்குநிகர் என்று தன்னை பீற்றிகொண்டலையும் அந்த ஈனப்பிறவி என்னிடம் மன்னிப்புக்கேட்கும்காட்சியைக் காணப் போகிறீர்கள் அங்கே!
DAILY BUGLE
SPIDER FAILS TO SOLVE CITY THREAT
வித்தியாசமான அமைப்பிலிருந்த பக்கத்துக் கட்டிடத்தை நோக்கி நடந்தார்கள்...
சொத சொதவென்றுசகிக்கவில்லை இந்தஇடம்சீக்கிரமே வந்த வேலையைமுடித்துக் கொண்டு திரும்பிவிட்டால் தேவலை!
முகப்புகதவை நெருங்கியதும்—
ஹாய்...ஸ்பைடர்! நீ வருவாய் என்று தெரியும்...வா உள்ளே
அந்த ஈனப்பிறவியின் முகத்தைநான் பார்த்ததுகூட இல்லை ஆனாலும்அவனை நினைக்கும்போதே வெறுப்பும் அருவருப்பும் மண்டுகிறது என் நெஞ்சில்
எதிரே யாரொருவர் வந்ததும்சட்டென்று தானாகவே கதவு திறந்து கொள்கிறது எலக்ட்ரானிக்ஸ் வேலை இந்தவேடிக்கையை கண்டுஸ்பைடர்பிரமித்துப்போகவேண்டும் என்று எதிர்பார்க்கிறாயா?


குதிரை கனைப்பதுபோல் சிரித்தான் தவளை...
உடலை வருத்திவேலைசெய்ய எனக்குப் பிடிப்பதில்லை. எனவேதான் அப்படி ஒருதானியங்கி ஏற்பாடு .. உடல் உரத்தைவிட புத்திசாதுரியத்தின்மீது நம்பிக்கை வைத்திருப்பவன்நான்- உன்னைப்போல்ஆர்ப்பாட்டம்பண்ணத் தெரியாதுஎனக்கு...
ப்பூ ..! இப்படி உடல கொழுததுப்போய் நடக்கத் திராணியின்றிக் கிடக்கும் சோம்பேறிகள் கூறும் வழக்கமான நொண்டிச் சாக்கு இது!
ஹாஹ்...ஹா! உன்வசமுள்ள ஆயுதங்கள் சாதாரணமானவை அல்லதான் ஆனால என மதியூகத்துக்குமுன் அவை ரொம்பவும் அற்பமானவை...
மறுபடியும் வாய்ப் பேச்சுத்தான். என் வலைத்துப்பாக்கியின் செயல்திறனுக்கு ஈடானதுப்பாக்கி உன் வசம் இருந்தால் காண் பியேன்பார்த்துவிடலாம்


மறுவினாடி —
துப்பாக்கி இல்லை ஸ்பைடர்... ஆனால் 'நாக்கு' இருக்கிறது! என் பெயர் கொண்ட பிராணிகள் பூச்சிகளையும் சிலந்திகளையும்தான் பிடிக்கப் பயன் படுத்தும் உறுப்பு...!
ஆ..வ்! பாஸ் கொதித்து சீறப்போகிறார்!
ஆனால்...
கோபப்படத்தேவையில்லை ஸ்பைடர். உன்னுடைய பொழுது போக்கு விளையாட்டுக்கருவி எனக்குத்தேவையில்லை ஏற்கனவே குறிப்பிட்டேனல்லவா... நான் மூளையைப்பயன்படுத்துபவன் என்று!
சபாஷ்...!



மகிழ்ச்சியால் மின்னின 'டெவில்' டெவ்லினின் விழிகள்...
உனக்கும் தண்ணீர் காட்ட ஒருத்தர் இருக்கிறார் என்று இப்போது புரிந்து கொண்டுவிட்டாயலலவா. ஸ்பைடர் குற்றத்தடுப்புகதாநாயகன் இனி இந்த தவளைதான் என்று' செய்தி முழக்கத்தில்' பிரகடனப்படுத்தப்போகிறேன்.
.. நகரை அழிக்கப்போவதாக அச்சுறுத்தி கடிதம் எழுதிய எறும்பை நசுக்கி அழிக்கப் போகிறவர் இந்த தவளைதான் நீயல்ல...!
அந்த மோதல் மறுநாள் செய்தித்தாள்களில் தலைப்புச்செய்தியாக இடம்பிடித்துக்கொண்டது...
ஏன் முடியாது... இந்த தவளை மனிதன் சாதாரண ஆசாமி இல்லை போலிருக்கிறதே!
ஸ்பைடரை மிஞ்ச ஒருவரால் முடியுமா என்ன?
DAILY BANNER
SPIDER v THE FROG
NEW SUPER-SLEUTH CHALLENGES SPIDER'S CROWN.
'PENSION OFF THE SPIDER' SAYS FROG
'FROG-MARCH UPSTART OUT OF TOWN'


தங்களுக்குள் பலப்பரீட்சை நடத்து வதிலேயே இருவரும் நேரத்தை வீணடித்துகொண்டிருக்கிறார்களே தவிர நகரை அச்சுறுத்திக்கொண்டிருக்கும் 'எறும்பு' விவகாரத்தில் கவனம்செலுத்துவதாகதெரியவில்லை
வாஸ்தவம்தான்! அப்படி யொருநெருக்கடி இருப்பதையே மறந்து விட்டார்கள் போலிருக்கிறது!
பல மைல்களுக்கு அப்பால், மனிதர்களின் காலடிபடாத ஒரு குன்றின் அடியில் இதே மாதிரியான விமரிசனம் பேசபபட்டது ..
குன்றின் கீழே இருந்த பாதாள அறையில்—
வீரர்களைவரச்சொல்லுடனடியாக ஒரு தாக்குதல் நடத்துவதற்கான தயார்நிலையில் வரட்டும்
இதோ. ஏற்பாடு செய்கிறேன் பிரபு!
ஆக எறும்பு விடுத்த எச்சரிக்கையை மறந்தேபோய்விட்டார்கள்போலிருக்கிறது நினைவூட்ட ஒருகாரியம்செய்யத் தீர்மானித்துள்ளேன!


சில கிமிடங்களுக்குப் பிறகு உலோக காலணிகள் எழுப்பிய ஓசைஅடங்கியபின்
முக்கியமான கட்டிடங்கள்,பாலங்கள், ஃப்ளை ஓவர்களைத் தகர்த்து நம்வலிமையை பறைசாற்றியபின்னரும் அவர்கள் அலட்டிக் கொண்டதாகத்தெரியவில்லை இன்னுமொரு தாக்குதல் அவசியமாகி விட்டது!


ஐநூறு பேர்கொண்ட படை, அமைப்பு புறப்படத்தயாரானது.
ஹெல்மெட்டை அணிந்து கொள்ளுங்கள்! சுவாச அமைப்பை இயக்க மறந்து விடாதீர்கள்!



ஒரே கல்லில் இரண்டு மாங்காய் அடிக்க வேண்டும் இந்தத் தாக்குதல் நம் ஆற்றலை அவர்கள் சரியாக மதிப்பீடு செய்யும்படி அமைய வேண்டும் என்பதோடு நம் முக்கிய எதிரி ஸ்பைடரும் அழிககப்பட வேண்டும்!
மற்றுமொரு ஆலோசனைக் கூட்டம் சாண்டர்ஸ்ஸின் அலுவலகத்தில கூட்டப்பட்டது.
முன்குறிப்பு ஏதுமின்றி கட்டிடங்களும் பாலங்களும் சரிந்து விழுகின்றன. தான் கேட்கும் தொகையை உடனே கொடுக்காவிடில் நகரத்தையே அழித்துவிடுவதாக மிரட்டுகிருன் எறும்பு
நிலைமை மிக மோசமாகிவிட்டது ஸ்பைடர்... நீகூட உருப்படியாக எதையும்சாதிக்க முடியாதநிலை-


'டெவில்' டெவ்லின் குறுக்கிட்டான் ...
இனியும்ஸ்பைடரை நம்பிக்கொண்டிருப்பதில்பிரயோஜனமில்லை... ஸ்பைடரைவிட மதிநுட்பமும் செயலாற்றலும் கொண்ட தவளா தற்சமயம் நகருக்கு வந்துசேர்ந்திருக்கிறார்!
தவளா...? ப்பூ...! அந்த ஈனப் பிறவியோடு என்னை ஒப்பிட்டுப் பேசாதே... கெட்ட கோபம் வருது எனக்கு!
ஸ்பைடர்... போதும் ஏற்கனவே பிரச்சனை வேண்டியமட்டும் இருக்கிறது- புதிதாக சிக்கலை உருவாக்காதே!
ஸ்பைடர் தன் இருப்பிடத்துக்கு திரும்பிய பின்—
தவளா-சே... அந்தப் பெயரை கேட்கும்போதே கொதிக்கிறது என் இரத்தம்! என் கால் தூசுக்குசமானமாகமாட்டான், அந்த அற்பப்பன்றி என்று நிரூபித்துக்காட்டப் போகிறேன்.
அவன்மீதுள்ள கோபத்தைஎங்களிடம்காட்டாதீர்கள் பாஸ் தாங்காது


அங்கே தவளையின் இருப்பிடத்தில்—
ஸ்பைடர் ஒரு உதவாக்கரை என்று தீர்மானிக்கப்பட்டு விட்டது கோபத்தில் கொந்தளித்துப்போயிருக்கிற அவனால் சிந்திக்கவோ முழு ஆற்றலோடு செயலாற்றவோ சாத்தியமில்லை...!
ஆமாம்...மாஸ்டர்! ஆனால் அந்த எறும்பின் கொட்டத்தை அடக்கும்வரை நம் வெற்றிமுழுமையடையாது மாஸ்டர்!
அதை நான் மறந்துவிடவில்லையடா... பொடியா! தன் முக்கியஎதிரியை தாக்கிஅழிக்க முயற்சியைமேற்கொள்வான் அந்த எறும்பு என்னைப்பற்றி அதிகம்வெளியே தெரியாதாகையால் அவனுடைய இலக்கு...
...ஸ்பைடராகத் தான் இருக்கும்!
116


தவளையின் கணிப்பு நூற்றுக்குநூறுசரியானதுதான்...
ஸ்பைடரை தாக்கிஅழிப்பதுதான் நமதுநோக்கம் ..ம், புறப்படுங்கள்


...வியத்தகு ஆற்றல்கொண்ட துளையிடும் கருவிகளின் துணைகொண்டு பூமியைக்குடைந்து தங்கள் இலக்கை நோக்கிமுன்னேறியது எறும்புப்படை



ஸ்பைடரின் பாசறையில் பாதுகாப்பு ஏற்பாடுகள் ஏராளம்...
எச்சரிக்கை விளக்கு எரிகிறது... ஸ்பைடர் பூமியின் அடியில்யாரோ அல்லது ஏதோ நம்மைநோக்கி வந்துகொண்டிருக்கிறது!
...பெட்டக அறைக்குள் செல்வோம் ஓடிவாருங்கள்!
சுழல் இரம்பம் இயங்குவது போல்ஓசை வருகிறது . !
வேகமாக நெருங்கி வருகிறது- வருவது எதுவாக இருந்தாலும் இந்தஉருக்குசுவர்களைத் துளைத்துக்கொணடு உள்ளே வருவது சாத்தியமல்ல!
சில வினாடிகளுக்குப்பின்
எ..எ.. என்ன அவை?
எறும்பின் கூலிப்பட்டாளமாக இருக்கவேண்டும்வகையான பாடம்புகட்டி அனுப்புகிறேன் பாருங்கள்...


முன்னணியிலிருந்தவன் உத்தர விட்டான் —
அதோ நம் இலக்கு.!தாக்குங்கள்!
ஆர்டினி விலகிஅப்பால் போ- பெல்ஹாம் நீயும்தான்! இவர் களை நான் கவனித்துக்கொள் கிறேன்.


அப்போது—
சுடுங்கள்...!
எச்சரிக்கை-பாஸ்..!


வலைத்துப்பாக்கியிலிருந்து மின்னல் வேகத்தில் வெளிப்பட்ட இழைகள் திரளாகபின்னிதடையையெழுப்பின
பாஸ் விரும்ப மாட்டார்... ஆனாலும் நான் ஓடிச்சென்று உதவிகோரி செய்தியனுப்பப் போகிறேன்.
முட்டாள்கள்! ஸ்பைடரை சுலபமாக அழித்துவிடலாம் என்று கனவுகாணாதீர்கள்!..


புரபஸர் டெலிபோனை எடுத்து பேசமுயன்றபோது—
அவசரம்காவல்துறை அதிகாரி சாண்டர்ஸ னுக்கு இணைப்புக்கொடு!
அஹ்... அதிர்ஷ்டம் என்பங்கில் இருக்கிறது!ஸ்பைடரின் உதவி யாளர்களில்ஒருத்தனைகவர்ந்து வரும்படி மாஸ்டர் சொன்னார் இந்த ஆசாமி தனியாக இங்கே இருக்கிறான்!


இதற்கிடையே...
வந்தவேகத்திலேயே எதிரிகள் ஓடிப்போய்விட்டனர்-
அவர்களை பின்தொடர்ந்து செல்வதற்கில்லை... ஆனால் கட்டிடங்களையும் பாலங்களையும் அந்த கிராதகன் எப்படி வீழ்த்தினான் என்று குறிப்பு கிடைத்துவிட்டது முதல்சுற்றில்வெற்றிஎனக்கே!
இனி தாக்குவது... என்னுடைய முறை!
ஓடுங்கள்...!
லாசர் கதிர்வீச்சு துப்பாக்கியை பிரயோகிக்கிறான் நம்மால் தாக்குப்பிடிகக முடியாது தோற்றுவிட்டோம்... பின்வாங்குங்கள்-
ஆர்டினி மெள்ள கண்களைத்திறந்தான்—
பயங்கரம்.. பாஸ்! புரபஸர் உதவிகோரி செய்தியனுப்ப ஓடியதிலும் அர்த்தமிருக்கிறது!
உடனடியாக புரபஸரை தடுத்து நிறுத்தியாக வேண்டும்..- ஏய்', கிழட்டுப் பிண்டமே.. எங்கே இருக்கிறாய்?
என்ன உளறுகிறாய்..? உதவியா..? எனக்கா..? என் பராக்கிரமத்தைப் பற்றி உங்களுக்கேநம்பிக்கைபோய் விட்டதா.. ஆர்டினி?
அவரை.. கா..ணோமே..


அங்கே—
கச்சிதமாக காரியத்தை முடித்து விட்டாயடா.. பொடியா! நீ உட் செலுத்திய இரசாயன கலவை நொடியில் பெல்ஹாமை ஹிப்னாட்டிஸத்துக்குஉட்படுத்தி விட்டது!
... மயக்க நிலையிலிருந்து விடு பட்டதும் அந்த எறும்பையும் ஸ்பைடரையும் ஒழித்துக் கட் டும் என்திட்டத்தின் இரண் டாம் கட்டம் தொடங்கி விடும்!
தங்களுடைய பாசறைக்கு வந்து சேர்ந்ததுஎறும்புப்படை...
முயற்சி தோற்றுவிட்டது எதிரியை அழிகக முடிய வில்லை பின்வாங்கி வந்துவிட்டோம்!
60
UMOS!
122



அதைக்கேட்ட எறும்பு சிந்தனையிலாழ்ந்தான் ...
நம்முடைய தாக்குதல் முறை ஓரளவு வெளிப்பட்டு விட்டது ஆனாலும்நம்மைமுறியடிக்கும் வழியோ அல்லதுநாம் அடுத்து எங்கே தங்குவோம் என்றோ யாருக்கும் தெரியாது!
ஹூம்ம்...! நம்முதல் முயற்சி தோற்றுப் போனது துரதிர்ஷ்டவசமானது எதிரியை அழிக்க சாதாரண தாக்குதல் போதாது என்பது தெளிவாகிறது!
மறுநாள் போலீஸ்தலைமை யகத்தில்...
மீண்டும் எறும்பிடமிருந்து ஒரு மிரட்டல் கடிதம் வந்திருக்கிறது பணம் வந்து சேராவிடில் விரைவிலேயே நகரத்தை அழிக்கப்போவதாகநினைவூட்டியிருக் கிறான்!
அவன் கேட்ட தொகை யைகொடுத்துவிடுவ தைத்தவிர வேறுவழி இல்லை!


எதிரிகள்வசம் கடினமான உருக்குத்தகடு களையும் துளையிடும் சக்திவாய்ந்த துளை யிடும் கருவிகள் இருப்பதாக தெரிகிறது.. இதுவரை நாம்அறிந்துகொண்ட உண்மை இது ஒன்றுதான்!
அத்தோடு பெல்ஹாம் வேறுகாணாமல் போய் விட்டிருக்கிறார். எதிரி கள் அவரை கவர்ந்து சென்றிருக்கலாமோ என்று சந்தேகிக்கிறேன்
இளக்காரமாக இடைபுகுந்தான் 'டெவில்' டெவலின்...
தவளையின் திறமையில் நம்பிக்கை வையுங்கள்! அவர்-எறும்பின் அட்ட காசத்தை கொடியில் ஒருமுடிவுக்கு கொண்டுவருவதோடு, ஸ்பைடர் கேட்டுக்கொண்டால் பெல்ஹாமை யும் மீட்டுத்தரக்கூடும்!
THE FROG PREPARES PLAN TO CAPTURE ANT.....
தூ...! அந்த தவளையைப்பற்றி துதிபாடிக்கொண்டு அலைகி றாயே- இதுவரை அவன் என்ன கிழித்தான்... சொல்!


தவளை அப்படியொன்றும் ஓய்ந்து கிடக்கவில்லை...
பெல்ஹாம் போகட்டும் ஹிப்னுட்டிஸ மயக்கத்திலிருந்த சிலமணிநேரத்தில் இங்கேஎன்னநடந்தது என்றுமயககம் தெளிந்தபின்னர் இவனுடைய நினைவுக்கு வராது...
அவனுடைய சருமத்தின் அடியில் நாம் பதித்துவைத் திருக்கும் நுண்ணிய கருவி அங்கே நடக்கும்ஒவ்வொரு சிறு சப்தத்தையும் நமக்கு அஞ்சல் செய்யும்!
25


ஸ்பைடரின் பாசறையில் பேசப்படும் ஒவ்வொரு வார்த்தையையும் இங்கி ருந்தேநாம்கேட்டறிந்துகொள்ள லாம்...ஹாஹ்-ஹா!
ஸ்பைடரின் சமயோசித திட்டங்களை அறிந்து கொண்டு என் மூளைத்திறனையும் சேர்த்து பயன்படுத்தும்போது வெற்றி வாய்ப்பு இருமடங்காகிவிடும்! இந்தவகையில் என்செயல் திறன் வலுப்பெற்றுவிடுகிறது .. விரைவில் ஸ்பைடரையும் மிஞ்சிவிடுவேன்—சுலபமாக...!



பெல்ஹாம் ஸ்பைடரிடம் திரும்பி வந்தபோது—
அந்த எறும்பின் ஆட்கள் உன்னைக் கவர்ந்து சென்றிருந்தால் உன்னை இப்படி விடுவித்துஅனுப்பியிருக்க சாத்தியமே இல்லை... என்னநடந்தது விபரமாகச் சொல்!
ஸாரி பாஸ்! உதவிகோரி செய்தியனுப்ப ரிஸீவரை கையில் எடுத்தது நினைவிற்கு வருகிறது அதன் பிறகு... இதோஇப்போதுஇங்கேயிருப்பது தான் தெரிகிறது...!
என்னதான் நடந்திருக்கும் என்று யூகிக்க முயன்றான் ஸ்பைடர்...
எதிரிகளிடம் அகப்பட்டுக்கொண்டுவிட்டோமே என்ற அதிர்ச்சியில் நினைவு பிசகிப்போயிருக்க வேண்டும்- அதுபோகட்டும் அவசரமாக செய்ய வேண்டிய பணி நிறைய இருக்கிறது- அதைக் கவனிப்போம் ..!
மறுபடியும் எறும்பு விவகாரம்தானா .. பாஸ்?


இந்த நகரின் வரைபடத்தை பாருங்கள் — முதலில் இங்கே தாக்கினுன் இரண்டாவதாக இங்கே... பிறகு இங்கே—
நீங்கள் என்னசொல்ல வருகிறீர்கள் என்றுபுரிகிறதுபாஸ்... இந்த இலக்குகளின் இருப்பிடத்தை வைத்து அந்த எறும்பு எங்கேயிருந்து வருகிருன் என்று உத்தேசமாக கணித்து விடலாம்!


கரெக்ட் பெல்ஹாம்! அதை நான் ஏற்கனவே தீர்மானித்தாயிற்று!
ஹெலி-கார்!


மேலே பறந்து கொண்டிருந்த ஹெலி-கார், அழைக்கும் குரலை இனம் கண்டுகொண்டு சட்டென்று கீழிறங்கி வந்தது...
இங்கேயே இருங்கள்... தொடர்ந்து ரேடியோ மூலம் உங்களோடு தொடர்புகொள்வேன்!
நகருக்கு வெளியே பல மைல்களுக்கு அப்பால்-
இந்த இடம்தான்...! ஆனால் கட்டிடங்கள் ஏதும் தென்படவில்லை யே! என் கணிப்பு ஒருவேளை தவறோ?


அதே சமயம், கீழே... நிலவறையில்-
நேர் மேலே ஏதோ வாகனம் பறந்து கொண்டிருக்கிறது. ஆனால்... விமானம் அல்ல!
போய் மாஸ்டரிடம் சொல்கிறேன்!
எறும்பின் பிரத்யேக டி. வி. திரை இயக்கம் பெற்றது...
ஸ்பைடர்...! எறும்பிடமிருந்து ஏவுகணை படைப் பிரிவுக்கு- மேலே பறக்கும் வாகனத்தை சுட்டுத் தள்ள வேண்டும்... உடனே தயாராகவும்!
அதைத் தொடர்ந்து-
டுமீல்! டுமீல்! டுமீல்! டுமீல்!
துளையிட்டு மேலே ஏறும் ஆற்றல் கொண்ட ஏவு கணைகளை அனுப்பவும்...
...ம்... சுட்டுத் தள்ளுங்கள்!


மேலே நடப்பதை டி. வி. திரையில் பார்த்துக்கொண்டிருந்தான் எறும்பு...
ஸ்பைடர் தப்பவே முடியாது!
ஹெலி-காரை குறி வைத்து மேலெழும்பின ஏவுகணைகள்...
எ-என்ன-இது?


வியத்தகு ஆற்றல் கொண்ட ஹெலி-காரினுள்ளே...
ஏவுகணைகள் வருவதைக் காட்டுகின்றன கருவிகள்...
மின்னல் வேகத்தில் வருகின்றன ஏவுகணைகள் ஆனாலும் அவை வந்து ஹெலி காரை தொடுமுன் மின்காந்த அலைப்பரப்பை நான் சூழச் செய்துகொண்டுவிட இயலும்!
மின் காந்த அலை தடையை வந்து தொட்ட மாத்திரத்தில் ஏவுகணைகள் புகையை கக்கிக்கொண்டு வெடித்து சிதறின...
பிரமாதம்...! இந்த புகை மண்டலம் கீழே இருப்பவர்கள் சில நிமிடங்களுக்கு இங்கே என்ன நடக்கிறது என்று பார்த்தறிய முடியாமல் செய்துவிடும்!
டம்-டமால்!
டம்-டம்!


ஹெலிகார் கட்டுப் பாடிழந்து தலைகீழாக பாய்வதாக ஒரு பாவ்லா...!
ஏவுகணைகள் என்னை வந்து தாக்கிவிட்டதாகவே நடிக்கப் போகிறேன்!
தந்திரத்தில் குள்ள நரியான ஸ்பைடர் ஹெலிகாருக்குள்ளி ருந்து நழுவி விழுந்தான்...
நம்பும்படியாக இருக்க வேண்டும்!


வெற்றிக் களிப்பில் மின்னியது எறும்பின் விழிகள்...
வெற்றி...வெற்றி... ஸ்பைடர் ஒழிந்தான்!
தாக்குதல் வெற்றிகரமாக முடிந்துவிட்டது-எதிரி அழிந்தான்!
தரையில் வந்து விழுந்த ஸ்பைடரின் உருவத்தை டி. வி. திரையில் காண முடிந்தது ..
அவனுடைய உடல் அங்கே விழுந்து கிடக்கிறது போய்அதை இங்கே கொண்டுவாருங்கள்... பிணத்தை பின்னர்பொதுமக்களுக்குகாட்டு வோம்யாரொருவர்எறும்புக்குஎதிராக கிளம்பினாலும் முடிவு அழிவுதான் என்று எச்சரிக்கைவிட உதவியாக இருக்கும்!


தன் பரம எதிரியை கொன்றுவிட்டோம் என்ற வெற்றி மதர்ப்பில் சில அடிப்படை எச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள அடியோடு மறந்து விட்டான் எறும்பு...
என் ஜெட் அமைப்பை கொஞ்சமாக இயங்கச் செய்து அடிபட்டுக்கொள்ளாமல் தரையை தொட்டுவிட்டேன்...


குன்றின் அடிவாரத்தில் ஒரு கதவு திறந்து கொள்ள...
அதோ கிடக்கிறது பிணம்!
ஓ... அங்கே என் பாசறைக்கு வந்த பசங்களல்லவா இவர்கள்! யாரைத் தேடி இங்கேவந்தேனோ அவர்களை நெருங்கி விட்டேன் என்பதுஉறுதி யாகி விட்டது!


அடுத்து
ஊயு!
ஐ யோ.. இவன் உயிரோடு தானிருக்கிறுன்!
ஸ்பைடரை கொல்வது அத்தனை எளி தென்றுநினைத்தீர்களா ? அப்படி என் திறமையைகுறைவாக மதிப்பீடு செய்தவர்களுக்கு வழக்கமாக நான தரும் பரிசு... இதோ—
வலைத்துப்பாக்கியிலிருந்து வெளிப்பட்ட இழைகள் கதவை கீழே இறக்கமுடியா மல் தடுததன...
சீக்கிரம்..! கதவைகீழே இறக்குங்கள் -தாழிடுங் கள்!


இனி...எறும்போடு நேரடி மோதல்தான்!
இதற்கிடையே அங்கே ஸ்பைடரின் பாசறையில்
ராடார் திரையில்ஹெலி-கார் தெரிகிறது ஆனால் செய்திக்கு பாஸிடமிருந்து பதில்வரவில்லை
தேடிச்சென்ற இலக்கை அடைந்திருப்பார்.. அதனால் ஹெலிகாரிலிருந்து இறங்கிச் சென்றிருக்கக் கூடும்!
சட்டென்று சில கணக்குகள் போட்டார் புரபஸர்..
கடைசியாக அவர் செய்தியனுப்பிய போதுஇருந்தஇடம் தெளிவாக தெரிகிறது அடுத்துஉடனடியாக அவர்ஹெலிகாரிலிருந்து வெளியேறி யிருக்க வேண்டும்!
எறும்பின் இருப்பிடம் அது வாகத்தானிருக்கும்! நொடி யில் அந்த இடத்தை துல்லிய மாக கணிந்து விட முடியும் என்றால்!



தாங்கள் பேசும் ஒவ்வொரு வார்த்தையும் தவளேயின் இருப்பிடத்தில் ஒலிபரப்பாக்கிக்கொண்டிருப்பதை அவர்கள் அறிய மாட்டார்கள்...
இதோ கணக்கிட்டு விட்டேன் ஆர்டினி.. அந்த இடம் இங்கிருந்து...
எல்லா விபரங்களேயும் அப்படியே குறித்துக் கொள்ளடா.. பொடியா!
பெல்ஹாம் விபரங்களனைத்தையும் ஆர்டினியிடம் சொல்லி முடித்ததும்..
அப்படியே எழுதிக்கொண்டு விட்டேன் ஸ்பைடரும் எறும்பும் இப்போது எங்கே இருக்கிறுர்கள் என்று நமக்குத் தெரியும்!
நாம் நேரடி நடவடிக்கைகளே மேற்கொள்ள வேண்டிய தருணம் வந்துவிட்டதடா பொடியா! ஆபத்துக்களே எதிர்கொண்டு காரியத்தைசாதிக்கும் பொறுப்பை ஸ்பைடரிடம் விட்டுவிடுவோம் ஆனுல் இறுதிவெற்றியைநமதாக்கிக் கொள்வோம்!



எறும்பின் பாசறைக்குள் நுழைந்தான் ஸ்பைடர்...
பெயருக்கு ஏற்பத்தானிருக்கிறது அவன் பதுங்கிக் கிடக்கும் இடமும்!
ஸ்பைடர்-நேராக இங்கே வந்து கொண்டிருக்கிறுன்!
எறும்பின் குரலில் அச்சம் இழையோடியது...
அவனை நாங்கள் கவனித்துக் கொள்கிறேம்... மாஸ்டர்! நம்முடைய டிரில்-துப்பாக்கியால் நொடியில் அவனை சிதறடித்து விடுகிறேம்!
எப்படியாவது தடுத்து நிறுத்துங்கள்!


எதற்கும் தயாராக இருந்த ஸ்பைடர் முந்திக்கொண்டு விட்டான
வலேத் துப்பாக்கியை இயக்குகிருன் - ஜா...க்...கி ..ரதை! ஹா ஆ ஆ...!
நகர முடிய வில்லே... என்னல்!
ஸ்பைடரை எதிர்கொண்டு வந்து அழிக்கத் துணிந்த உங்கள் மடமைக்கு நான் அளிக்கும் பரிசு இது!
பின்னர்...,
இந்த மட்டோடு உங்களே விட்டுச் செல்லும் என் கருணேக்கு நன்றி சொல்ல வேண்டும் நீங்கள்...
நம் குழு தோற்று விட்டது! விசேட பீரங்கிகளே தயார் நிலேக்கு கொண்டு வாருங்கள்...!
அஹ்...ஹ்...!


சில விஞடிகளுக்குப்பின்...
... ம்-சுடுங்கள்!
டுமீல்! டுமீல்!
வருகிற குண்டுகளின் எண்ணிக்கையை அடிப்படையாக வைத்துக் கணித்தால் அங்கே சுமார் ஆயிரம் எறும்புப் படை வீரர்களாவது குழுமியிருக்க வேண்டும்!
சட்டென்று மின்னல் வேகத்தில் எட்டிப் பார்த்துவிட்டு மீண்டும்மறைந்து கொண்டு விட்டான் ஸ்பைடர்..
தூ.! அரைடஜன் பேர்கள் தான் இருக்கிருர்கள் புது வகைபீரங்கியைச்சுற்றி
தொடர்ந்து சுடுங்கள்!
இன்னும் சில நிமிடங்களில் நான்மறைந்துகொண்டிருக்கும் தடுப்பை பிளந்துவிடுவார்கள அதற்குள்ஏதாவதுதீர்மானித் தாக வேண்டும்!
...ம்.! திட்டம்தயார் அதோ அந்தஉத்திரத்தை குறி வைக்கவேண்டும்!


லாசர் கதிர்வீச்சை உச்சத்திறனில் செலுத்தினால் வெண்ணெயினூடே கத்தி பாய்வதுபோல் நொடியில் அந்த இரும்பு உத்திரத்தை அறுத்துத் தள்ளிவிடும்!
மறுநிமிடம் உத்திரம்முறிந்து நேர்கீழே இருந்த தாக்குதல் படையினரின்மீது விழுந்தது.
அப்படியே போட்டு அமுக்கி விட்டது! எறும்பின் இன்னுமொரு எதிர்ப்புத் திறனையும் முறியடித்தாயிற்று!
படார்!
சட்டென்று எதிரே தோன்றினான் எறும்பு..
நான் இன்னும் அழிந்துபோய்விடவில்லை.. ஸ்பைடர்!
இப்போது எதையும் செய்யத்தயாராக இருப்பான் எறும்பு..! இவனை ஒழித்துவிட்டால் அல்லது சிறைப்படுத்திவிட்டால் அந்த தவளை சாதிககத்தவறியதை ஸ்டைர் சாதித்து விட்டதாக நிருபணமாகிவிடும்!
நேரடி மோதலுக்கு நீயே வந்துவிட்டதிலிருந்து இனி உனக்கு பக்கபலம் வேறு ஏதுமில்லை என்பது உறுதியாகிவிட்டது..



ஆனால் தோல்வியைப் பற்றிய எண்ணம் தவளேயின் நெஞ்சில் கொஞ்சமும் கிடையாது...!
பார்வம்...ஸ்பைடர்! தன் உயிரைப் பணயம் வைத்து எறும்பை ஒழிக்கும் ஆபத்தான முயற்சியை மேற்கொண்டிருக்கிறான் ஆனால் அவன் ஈட்டும்வெற்றிகடைசியில் எனக்குசொந்தமாகிவிடப் போகிறது
ஸ்பைடருக்கு எப்படி யாவது முட்டாள் பட் டம்கட்டியாக வேண்டும்!
தவளே புன்னகை செய்தான்...
ஸ்பைடரிடம் சாமர்த்தியம் கொஞ்சம் இருக்கிறது என்றே வைத்து டாலும், அவனுடையஉதவியாளனேயே எனக்கு தொடர்ந்து தகவல் அனுப்பிக் கொண்டிருக்குமாறுசூழ்ச்சிசெய்திருக் கும் என் சாதுரியதத்துக்கு ஈடாகுமா?
ஆமாம்...பெல்ஹாம் மூல மாக இப்போது ஸ்பைடர் எங்கேஇருக்கிறான் என்றும், அங்கே எறும்பும் இருக்கி றான் என்றும் தெரிந்து கொண்டுவிட்டோம்...! அஹ்..ஹஹ்..ஹா!


அப்போது தவளையின் உதவியாளன் எதிரே சுட்டிக் காட்டினான்...
எறும்பின் கொட்டத்தை அடக்குபவனே குற்றத்தடுப்பியல் கதாநாயகன் என்ற பட்டத்துக்குரியவனாவான். அந்தப்பட்டம் விரைவில்எங்கே சொந்தமாகப்போகிறது!
குன்றின் உச்சிக்கு எப்படியோ ஏறிவிட்டிருந்தான் எறும்பு
...செய்திமுழககத்துக்கு விறுவிறுப்பான தொடர் கட்டுரை ஒன்றும் கிடைக்கும்!
இதோ—வந்து சேர்ந்து விட்டோம்...மாஸ்டர்!
நான் தப்பியோடிவிட முடியும் என்னைததடுத்து நிறுத்த யாராலும் ஹா ஆ ஆ-!
நீ இயக்க இருந்தது எதுவாகஇருந்தாலும் இனி உனக்கு பயன் படப்போவதில்லை!
என்னுடைய விண்கலத்தை நாசம் செயதுவிட்ட உன்னை நான் கொல்லாமலவிடப்போவதில்லை... அஹ்-
உன் துப்பாக்கியில் தோட்டாக்கள் தீர்ந்துபோய் விட்டனபோலும்... ஆனால் என் வலைத் துப்பாக்கியில் இன்னமும்ஏகப்பட்ட இழைகள் உள்ளன.


ஆனால் ஸ்பைடரின் வலைத்துப்பாக்கி
யிலிருந்து இழைகள் வெளிப்படுமுன்-
ஹே...என்னதான்
நடக்கிறது?


அங்கே தவளை வெற்றிச்சிரிப்பு சிரித்தான்...
என்னுடைய 'இரை' அது!
ஐயோ
தவளைகள் இரையைப்
பிடிக்க நாக்கை நீட்டு
வதுபோல் சரியான
சாகஸம்!



நூறுகஜ தூரம் அவர்கள் விலகிச் சென்ற பின —
நன்றாக கட்டிப்போடுடா பொடியா! சீக்கிரமேநாம் இங்கிருந்து கம்பிநீட்டி விடவேண்டும்!
தவளைகள் பூச்சிகளைபிடிக்க நாக்கை பயன்படுத்தும்நானோ எறும்பைப்பிடித்திருககிறேன் அவ்வளவுதான் வித்தியாசம்!
அப்படி புதர் மறைவில் கொண்டு போய் வண்டியை நிறுத்துடா... பொடியா! கொஞ்சநேரம் பதுங்கிக் கொண்டிருந்துவிட்டு நிலைமை சீரானபின் கிளம்பலாம்!
பார்த்துக் கொண்டிருக்கும் போதே என் 'கைதி'யை கவர்ந்து சென்றது யார்?
சில விநாடிகளுக்குப்பின் --
அதோ போகிறான் ஸ்பைடர்..! நம்மை அவன் பார்க்க முடியாது பயல் ரொம்பவும் தளர்ந்து போய்விட்டான்... இன்றைய வெற்றியை தவளை தனதாக்கிக்கொண்டுவிட்டதை அவன் புரிந்து கொண்டிருப்பான்!







டெலிபோன் மூலம் கிடைத்த அழைப்பிற்கிணங்க நகரிலிருந்த அனைத்து பிரபலபத்திரிக்கைகளின் பிரதிநிதிகள் தவளையின் புதிர் பங்களாவிக்கு வந்து சேர்ந்தனர்...
வரும்போதுமழைக்கோட்டு கொண்டுவரும்படி டெலிபோனில் அவர்கள் சொன்னபோது ஒன்றுமே அர்த்தமாகவில்லை இப்போதுதான் விளங்குகிறது!
கொஞ்சம்கூட மேகமூட்டமே இல்லாத நாளில் அப்படி ஒரு யோசனை கூறப்பட்ட போது ஏதோகிண்டல் என்றுஎண்ணி நானும்மழைகோட்டு எடுத்து வரவில்லை!
வாருங்கள்... வாருங்கள்! செய்தியாளர்கூட்டம் விரைவில் தொடங்கவிருக்கிறது!
வெற்றி மதர்ப்பில் பூரித்துப் போயிருந்தான் தவளை...
அன்பார்ந்த நிருபர்களே.. பிரமிப்பூட்டும் செய்தி ஒன்று விரைவிலேயேஉங்களுக்கு கிடைக்கவிருக்கிறதுஎன்று தெரிவிககவே இந்தக்கூட்டத்திற்கு ஏற்பாடுசெய்தேன்.
டெவ்லின் இங்கே எப்படிப்பட்ட உடையில் வரவேண்டும் என்று நீ சரியாகப்புரிந்து வைத்திருக்கிறதைப்பார்த்தால் ஆசாமியை உனக்கு முன்பேநெருக்கமாக தெரியும் என்று நினைக்கத்தோன்றுகிறது... இவன் சொல்வதெல்லாம் உண்மைதானா?


தானே வெற்றி பெற்ற வன்போல் ஏகக்குஷி யோடுகாணப்பட்டான் 'டெவில்' டெவ்லின்..
தோழர்களே நகரை மிரட்டி அச்சுறுத்திக் கொண்டிருந்தசமூகவிரோதியானஎறும்பை இன்றுமாலை உங்கள்முன் ஆஜர்படுத்தப் போகிறேன் ஆமாம் அவனுடைய அட்டகாசத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு விட்டது—இந்த தவளையின் தயவால்!
கேட்டீர்களா .? எறும்பைஒடுக்கி நகரை காப்பாற்றி விட்டார் இந்த தவளை! நாளை என்னுடையபத்திரிக்கையில்ஆரம்பமாகும் தொடரில் எப்படி ஸ்பைடர் ஒன்றுக்கும் பிரயோஜனமில்லாத உதவாக்கரை என்று நிரூபிக்கப்படும்—ஆதாரங்களுடன்...—
நிருபர்கள் கலைந்து சென்றபின்...
ஜமாய்த்து விட்டோம் ...மாஸ்டர்!
திட்டமிட்டபடியே சாதித்து விட்டோமடா...பொடியா! உழைத்தவன்— ஸ்பைடர்— ஆனால்வெற்றிநம்முடையது ஹஹ...ஹா!




ஏமாற்றப்பட்டஸ்பைடர்தவளே கூட்டியகிருபர் கூட்டம்பற்றி கேள்விப்பட்டான்..
கொழுத்துப்போன பன்றிப்பயல் ஸ்பைடரிடம் வாலாட்டிப் பார்க் கிருன் அழிவுகாலம் நெருங்கி விட்டது பயலுக்கு..!


சந்தடியின்றி தவளேயின் பங்களாவினுள் புகுந்தான் ஸ்பைடர்..
எறும்பை தவளே கவர்ந்து கொண்டு வந்திருக்கிருன் என்ருல் நம்பாஸ்என்ன வாளுர்..?
புரபஸர் பெல்ஹாமின் குரல்! அவர் எங்கே இங்கே வந்தார்?
அதை நிறுத்தடா...பொடியா! பெல்ஹாமின் பிதற்றலே இனி யும் கேட்டுக்கொண்டிருக்க வேண்டியஅவசியம்கிடையாது!


அதையடுத்து கேட்க நேர்ந்த விஷயம் ஸ்பைடரை கொதிப்படையச்செய்தது..
ஓ...கோ! இதுவா விஷயம்?
பெல்ஹாம் ஹிப்னட்டிஸ மயக்கத்தில் இருந்தபோது அவனுடைய தோலின் அடியில் நுணணிய மைக்ரோபோனை புதைத்துவைத்து அவர்களுடைய இரகசிய திட்டங்கள் அனைத்தையும் கேட்டறிந்தநம்முடைய புத்திசாலித தனத்துக்கு ஈடு ஏது—இணை ஏது?
அந்த ஏற்பாட்டினால் எறும்பை முறியடிக்கச்சென்றஸ்பைடரை நாம் பின்தொடர்ந்து சென்று இறுதிவெற்றியைநமக்குசொந்தமாக்கிக்கொள்ள முடிந்தது!
பொங்கி வந்த சினத்தினால் ஸ்பைடரின் மேனிநடுங்கியது ஆனால் தன் கோபத்தை அடக்கிக் கொண்டான்...
ஹூம்.. இப்படியே பாய்ந்து பழி வாங்கி விடலாம்தான். ஆனால் அதில் சுவாரஸ்யம் இராது! ஸ்பைடர் எப்போதும் எதையும் வித்தியாசமாகவே செய்துபழக்கப்பட்டவன் அல்லவா?


தன்பாசறைக்குள் சிந்தனை யோடு வந்து சேர்ந்த ஸ்பைடரின் முகம் இறுகிப் போயிருந்தது..
அவன் செய்த விஷமத்தை அம்பலப்படுத்தினால் என் பெருமைக்கு இழுக்கைத் தேடித்தந்துவிடும்..எதையும் இரகசியமாகவே சாதிக்க வேண்டும்!
பாஸ்...வந்து விட்டீர்களா — அப்பாடா...!
எங்கே போயிருந்தீர்கள்பாஸ்? எறும்பை தவளை கவர்ந்து வந்திருக்கும் செய்தி நிஜம் தானா?
துரதிர்ஷடவசமாக அதுநிஜம்தான் புரபஸர் உன் உடம்பில எங்கோ ஓரிடத்தில் தோலுக்கு அடியில் புதைக்கப்பட்டிருக்கும் நுண்ணிய மைக்ரோபோனும் அது அனுப்பும் செய்தியை வாங்கி ஒலிபரபப தவளையின் இருப்பிடத்தில் இயங்கும் ரேடியோவும்தான் அடிப்படை காரணங்கள்...
என்னது..? நான்பேசிய அனைத்தையும் அவன் கேட்க வாய்ப்பிருந்ததா சே..,என்னையறியாமலே உங்களுக்குத் துரோகம் பண்ணி!வந்திருக்கி றேன் — பாஸ்!
உன்னைச்சொல்லி குற்றமில்லை பெல் ஹாம்! நீ காணமற்போனசம்பவத்தை எண்ணிப்பார் அப்போதுஹிப்னாட்டிஸ மயக்கத்தில் உன்னை ஆழ்த்தி இந்த விஷமத்தை செய்திருக்கிறான் அந்த பன்றிப்பயல்...
உன் உடம்பில் மைக்ரோ போன் எந்தஇடத்தில் ஒளிந்து கொண்டிருக்கிறது என்பதை கண்டறிந்து அகற்றும் மனோநிலையில் நான் இல்லை எனவே இந்தக் கருவியை உன் கழுத்தில் தொங்கபோட்டுக் கொள் மைக்ரோபோனிலிருந்து கிளம்பும் செய்தியைதெளி வில்லாமல் பண்ணிவிடும் இது


இப்படிப்பட்ட குழப்பமான மனோ நிலையில் ஸ்பைடரை அவனது சகாக்கள்ஒருபோதும்பார்த்ததில்லை
அந்த தவளையைப்பற்றி ஓரிரு வார்த்தைகள் நான் சொல்ல-
நிறுத்து பெல்ஹாம்! இப்போது நடந்த சூழ்ச்சியை முற்றிலுமாக மறந்துவிட விரும்புகிறேன்... என்னைச் சற்றுநிம்மதியாக இருக்கவிடு!


மீண்டும் ஸ்பைடர் சிந்தனை வயப்பட்டதும்...
மாஸ்டர் ரொம்பவும் நொந்து போயிருக்கிறார்..நாம் ஏதாவது செய்து நிலைமையை சீர்படுத்த முயற்சிப்போமே!
தவளை எறும்பை பிடித்துக் கொண்டு வந்துவிட்டான் என்பது நடந்து முடிந்த உண்மை.. இதைமாற்ற நம்மால் ஆகுமா என்ன?


சட்டென்று இருவருக்கும் ஒரே நேரத்தில் ஒரு யோசனை தோன்றியது
தவளையிடமிருந்து எப்படியாவது எறும்பை அபகரித்துக்கொண்டு வர முயற்சிப்போம் உடனேசெல் வோம்... வா!
நல்ல யோசனைதான்... பாஸ் தானே இப்படியொரு காரி யத்தைசெய்ய அவருடைய மனம் உடன்படாது. ஆனால் நாம் செய்யலாம்தான் இந்த முயற்சியில் நமக்கு உதவ அவருடைய விசேட ஆயுதங் கள் சிலவற்றை எடுத்துச் செல்வது பாவமாகாது!
அடுத்த அரைமணி நேரத்தில், அவர்களிருவரும் தவளையின் பங்களா சுவரை தகர்த்து இரகசிய மாக உள்ளே நுழைந்து புகுந்து விட்டனர்.
அணுச்சிதறல் கருவி சுலபமாக சுவரில் துளையிட்டு விட்டது!
உஷ்ஷ்...! நாம் எதிர்பார்த் ததைவிட அனுகூலமான சூழ்நிலை இங்கே நிலவுகிறது. ஆர்டினி!
இப்போதைக்கு உன்னிடம் விடை பெறுகிறேன்.. எறும்பு! சற்று ஓய் வெடுத்துக்கொண்டபின் இன்றிரவு உன்னைப்போலீசாரிடம்ஒப்படைக்கும் நிகழ்ச்சிக்கு தடபுடலாக ஏற்பாடு செய்ய வேண்டும் நான்...!


எறும்பு அடைபட்டுக் கிடந்த கூண்டினுள் சாவியை பெல்ஹாம நுழைத்த மறுகணம் —
ஐ..யோ..யாரது?
உப்ப..!
ஓ...உங்கள்பாஸ் அனுப்பிவைத் தானு-எறும்பை கடததிக் கொண்டு வரும்படி! இந்தச் செய்தி நிச்சயம் பரபரப்பூட்டும் என்பதில் சந்தேகமேயில்லை...!


என் இலட்சியம் நிறைவேற காரணமாக இருக்கப்போகும் 'க்கைதி' யை அத்தனைசுலபத் தில்யாரும்கவர்ந்துகொணடு போகவிடுவேனு... என்ன?
ஸ்பைடர் எங்களை இங்கே அனுப்பி வைக்கவில்லை...
நாங்கள் இங்கே வந்திருப்பது அவருக்குத் தெரியாதே! ஹா — அங்...கே?


விந்தை இயந்திரம் ஒன்று தளத்தை தகர்த்துக் கொண்டு மேலெழும்பியது அதன் உள்ளேயிருந்து பாய்ந்து வெளிப் பட்டனர்... எறும்புப்படை வீரர்கள்!
யா... யார் நீங்கள்? அனுமதி யின்றி உள்ளே நுழைய என்ன தைரியம் உங்களுக்கு?
நான் எங்கேயிருந்தாலும்சுலபமாக என் இருப்பிடத்தை அறியும் ஆற் றல்கொண்டஎன் மெய்க்காப்பாளர் படையைஉனககு அறிமுகம்செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு விட்டது... தவளை!
மறுவினாடி அங்கே நிலைமை தலைகீழாக மாறிப்போனது-
பூமியைக் குடையும் இயந்திரத்தினுள் ஏறுங்கள் இப்போதுநீங்கள் நால்வரும் என கைதிகள்!
மாஸ்டர்... ஏதாவது செய்துசமாளியுங்களேன்


எல்லோரும் ஏறிக்கொண்டபின் வந்த வழியே மறைந்து விட்டது அந்த இயந்திரம் அதன் உள்ளே—
முட்டாள்கள்...! உங்கள் நால்வருக்கும் மரண தண்டனை வழங்குவது என்று தீர்மானித்துவிட்டேன்... தண்டனை எந்தவகையில் நிறைவேற்றப்படும் எனற விபரம் விரைவிலேயே உங்களுக்கு தெரிவிக்கப்படும்..
புரபஸர் நாம் இங்கே இப்படி அகப்பட்டுக் கொண்டுவிட்ட தகவல் பாஸ்"க்கு தெரியவாய்ப்பில்லை... அவருடைய உதவி இன்றி நாம தப்பிக்கவும் முடியாது!


திடீரென்று சிந்தனைகலைந்து சிலிர்த்து எழுந்தான் ஸ்பைடர்...
பெல்ஹாம்... ஆர்டினி! எங்கே போய்த்தொலைந்தார்களோ தெரியவில்லையே?


ஸ்பைடருக்கு ஓர் சந்தேகம் உதிர்த்தது...
சுவர் துளையிட உதவும் அணுச்சிதறல் கருவி மாற்றுச்சாவிக்கொத்து-- காணவில்லை! பெல்ஹாமும் ஆர்டினியும் தான் எடுத்துச்சென்றிருக்க வேண்டும் எங்கே? எதற்கு?
விசுவாசமுள்ள முட்டாள்கள்...! நான் படும்வேதனையை பார்த்துவிட்டு தங்களாகவே போய் எறும்பை கடத்திக் கொண்டுவரஎண்ணியிருப்பார்களோ?


அவர்கள் இருவரும் அப்போது எறும்பின் கைதிகளாக விரைந்து விலகிப் போய்கொண்டிருந்தார்கள்
உங்களுக்கு நான் அளிக்கும் மரண தண்டனை என் ஆற்றலை பறைசாற்றுவதாக அமைவதோடுமற்றவர்களுக்கு-குறிப்பாக மீதமுள்ள இன்னொருமுககிய எதிரியான ஸ்பைடருககுஒருஎச்சரிககையாகஅமையும்
விர்ர்ர்...


அப்போது தற்செயலாக பெல் ஹாமின் கழுத்தில் தொங்கிய சங்கிலி எறும்பின் பார்வை யில் பட்டது...
என்ன இது? நுண்ணிய ரேடியோ கருவியா...?எதுவாகஇருந்தாலும் இனி இது உனக்கு பயன்படப் போவதில்லை.
...இதை அகற்றிவிட்ட பின் இங்கே இனி பேசப்படும் வார்த்தைகள் அங்கேதவளை யின் பங்களாவில் ஒலிபரப்பா கக் கூடும்
தன் சகாக்களைத்தேடி தவளையின் பங்களாவினுள் ஸ்பைடர் நுழைந்த போது—
யாரையும் காணவில்லையே!
எறும்பு—எங்கே எங்களை இட்டுச்செல்கிறாய்?



...எங்களை என்ன செய்யப் போகிறாய்?
ஏற்கனவே சொன்னேனல்லவா? உங்களுடைய மரணம் மற்றவர்களுக்கு ஒருபாடமாக அமையப் போகிறது அதன்பின் எறும்பை எதிர்க்க யாரும் துணியமாட்டார்கள்...
புரபஸரும்..எறும்பும்தான் பெல்ஹாம் தன்கழுததுச் சங்கிலியை அகற்றியிருக் கக்கூடும்!
இறுதியில் அவர்கள் பயணம் செய்த வாகனம் தரைக்குமேலே வந்தது...
அந்த கட்டுமானத்தின் உச்சியில் உங்கள்நால்வரை யும்கொண்டுபோய்நிறுத்தப் போகிறேன்...
ஐ...யோ! உன்னைக்கையெடுத்துக் கும்பிடுகிறேன் உயரம் என்றாலே எனக்கு குலை நடுங்கும்—பயத்தி லேயே செத்துப்போய்விடுவேன்!


ஒருமணிநேர இடைவெளிக்குப் பின் ---
நகர மக்களுக்கு எறும்பு விடுக்கும் அறிவிப்பு-அங்கேபலமாடிகட்டிடத் திற்கான அடிப்படை கட்டுமானத் தின் உச்சியில் நிற்கும் நான்குமடை யர்களும் எறும்பின் ஆற்றல்தெரியா மல் வாலாட்டத்துணிந்தவர்கள்! அந்தமடையர்களையும் கட்டிடத்தின் கட்டுமானத்தையும் இப்போது அழித்து என் ஆற்றலை உங்களுக்கு புரியவைக்கப் போகிறேன்!
அருகே— ஆழல்பூமியின் அடியில்...
கேடு நெருங்கி விட்டது நகரம் மொத்தமும்மேலேகவனித்துக்கொண் டிருக்கும்-ம்.... அஸ்திவாரத்தை தகர்த்து கட்டிடத்தின் கட்டு மானத்தை விழச்செய்யுங்கள்!



பிரம்மாண்டமான கட்டுமானம் ஆட்டம் கொடுத்த வேளையில்
எ..ன்..னே..காப்பாற்றுங்கள்!
புரபஸர்..மேலேபாருங்கள்! நம்முடையபாஸ் வருகிறார்!
ஹெலி...கார்!
ஸ்பைடரின் விந்தை வாகனத்திலிருந்து இரண்டுகால்கள் நீண்டன..
சமாளித்துக்கொண்டு நில்லுங்கள்..- இதோ மின்காந்த சகதிகொண்ட கால்களை பதித்து கட்டுமானம் ஆடாமல் நிலைப்படுத்தப்போகிறேன்!
எங்களையும்.. காப்பாற்று ஸ்பைடர்-உன்னை மன்றாடி கேட்டுக் கொள்கிறேன்— கருணை வை!


வேறு எந்த வாகனத்தாலும்சாதிக்க முடியாததை ஹெலிகார் சாதித்துக கொண்டிருந்தது..
கட்டுமானம் சாய்ந்து விடாமல் செய்துவிட்டார்!
நால்வரும் நெருங்கி நில்லுங்கள் வலைத்துப்பாக்கியை இயக்கி இழைளால் உங்களை பிணைந்து அப்படியேமேலே ஹெலிகாருககு தூக்கப்போகிறேன்!
பூமியின் கீழே —
என்ன நடக்கிறது அங்கே ஏன் கட்டுமானம் விழவில்லை?
அஸ்திவாரத்தை முழுவதுமாக தகர்த்து விட்டோம்- ஆனாலும் கட்டுமானம்விழவில்லை! புரியாத புதிராக இருக்கிறது!
சரி மசமசவென்று இங்கே நின்றுகொணடிராமல் மேலே போய் விஷயம் என்னவென்று பாருங்கள்...
இதோ போகிறோம்... மாஸ்டர்!


இதுவரை பைனேகுலர் மூலம் கீழே உன்னிப்பாக கவனித்துக்கொண்டிருந்த ஸ்பைடர் திருப்தியோடு முகம்மலர்ந்தான்
எப்படியும் மேலே தலைகாட்டு வார்கள்என்று நம்பித்தான் இத்தனைநேரமும் காத்துக் கொண்டிருந்தேன் இரண்டு பேர்தலை தெரிகிறது...!
நீங்கள் நால்வரும் எதையாவது இருக பிடித்துக்கொள ளுங்கள்
அடுத்து—
அவர்களுடைய இருப்பிடம் தெரிந்துவிட்டது!
ஸ்பைடரின் ஹெலிகார் நகர்கிறது கட்டுமானத் தையும் இழுத்த படி!


எறும்பின் ஆட்கள் தலைநீட்டிய இடத்துக்கு நேர் மேலேகட்டுமானம் வந்ததும்...
காந்த அலை வீச்சை நிறுத்தி கட்டுமானத்தை சாய்ந்து விழ அனுமதித்துவிட்டேன்!
கனமான உலோக கட்டுமானத்தின் பழுதாழாமல் தரை அதிர்ந்தது...
எறும்பும் அவன் சகாக்களும் ஒட்டுமொத்தமாக அழிந்து போவது உறுதி!
ஐயோ... நமக்கு நேர் மேலேவந்து விழுந்து விட்டது- மேற்கூரை இடிந்து குகைப்பாதை அழியப் போகிறது.
டமால்
ஆ... ஆ...


அவர்களுக்கு மேலே..
இந்த இடத்தைவிட்டுச் செல்லுமுன் புதைபொருள் ஆராய்ச்சி ஒன்றை நடத்தவேண்டியிருக்கிறது...
புதைபொருள் ஆராய்ச்சியா- விளங்கவில்லையே?
விர்ர்ர்ர்ர்!
புல்டோஸரை இயக்கினான் ஸ்பைடர்...
அட... நாசமாகப் போகிறவனே!
ஹாஹ்...ஹா! உன் அட்டகாசம் இனி இங்கே செல்லுபடியாகாது அப்பனே!


கெடுவான் கேடு நினைப்பான் என்றகதையாகி விட்டது— தவளை... அவனுடைய சகா 'டெவில்' டெவ்லின் ஆகிய மூவருடைய விஷயத்திலும்!
வெளியே முகத்தைக்காட்டவே வெட்கப்பட்டுக்கொண்டு ஊரை விட்டே ஓடிப்போய் விட்டான் அந்தக் கொழுத்தஎருமைக்கடா!
HOUSE FOR SALE POSITIVELY NO DRY ROT
அந்தப்பயலுக்கு நீ சிபாரிசு செய்தாயே என்று ஏகப்பட்ட பணம் செலவழித்து அர்த்த மற்ற மாற்றங்கள் செய்தேன் என்கட்டிடத்தில்அத்தனையும் வீணாகப்போயிற்று...என் கண்முன்நில்லாதேடெவ்லின் தொலைந்து போ எங்காவது!
அந்த நகரம் சர்வ வல்லமைபடைத்த ஸ்பைடரின் பாதுகாப்புக்குள் மீண்டும் வந்து சேர்ந்தது...
ஸ்பைடருக்கு எங்கள் பாராட்டுக்கள்...
நம் அனைவரையும் காப்பாற்றிய கதாநாயகன் வாழ்க!
ஸ்பைடருக்கு நிகர் யாருமே கிடையாது—இப்பூமியில'
முற்றும்...

# ஆழ்கடல் யுத்தம்!



அழிவு, கொள்ளை, தீமை கழகம் என்ற பெயரில் நாசவேலையில் ஈடுபட்டு வந்த ஒரு சர்வதேச சமூகவிரோத கும்பலை வேரறுக்க, துப்பறியும் நிபுணர்களான லாரன்ஸ், டேவிட் இருவரின் திறமையை பயன்படுத்தி வந்தது— ஐ.நா. உளவுத்துறை! அவர்களிருவரும் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தபோது, அருகேயிருந்த டி.வி. திரை திடீரென்று பளீரிட்டது...
லாரன்ஸ்— டேவிட் இருவருக்கும் அழைப்பு...
ஓ...—மறுபடியும். ஏதோ பணி போலும்!
உடனே சான் பிரான்ஸிஸ்கோ தலைமையகத்துக்கு செல்லவும்! அவசரம்!
விரைவில் சான்பிரான்ஸிஸ்கோ போய்ச் சேர்ந்தனர்...
அடுத்த வாரம் நடக்கவிருக்கும், உலக சமாதான கருத்தரங்கு சம்பந்தப்பட்டதாக- நம்முடைய புதிய பணி இருக்குமோ என்றொரு யூகம்!


சான் பிரான்ஸிஸ்கோ நகர் ஐ. நா. தலைமையகத்தில் —
ஆமாம்... கருத்தரங்கிற்கு கம்யூனிஸ்ட் நாடுகளிலிருந்து, ஒரு விமானம் நிறையபிரதிநிதிகள் வருகிறார்கள்... அவர்களை பாதுகாக்கும் அதிமுக்கிய பொறுப்பை உங்களிடம் ஒப்படைக்கிறேன்!
என் யூகம் சரிதான் . !
CANADA
அ. கொ.தீ. கழகத்தினர் தங்களுடைய கைவரிசையை காட்ட இது ஒரு அருமையான சந்தர்ப்பம்! ஆகையால் விழிப்புடன் செயல்பட வேண்டியது அவசியம்!


அந்த ஐ. நா. உளவுத் துறை அதிகாரி மேலும் விளக்கினர்...
விமானம், வழியில், மிட்வே தீவில் இறங்கி, பெட்ரோலை நிரப்பிக் கொண்டு பயணத்தை தொடரும்... நாளை காலை பதினேரு மணிக்கு அவர்கள் சான்பிரான்ஸிஸ்கோ வந்தடைவார்கள்.
அமெரிக்காவில் பல இடங்களில் அ. கொ. தீ. கழகத்தினரின் இரகசிய விமானம் ஒன்று புறப்பட்டுச் சென்று, பிரதிநிதிகளை வானிலேயே சந்தித்து, பாது காப்பாக கூடவே பறந்து வருவது நல்லது...!


டேவிட்... நீ இங்கேயே தங்கி, விமான நிலையத்தில் பாதுகாப்பு ஏற்பாடுகளை கவனி ..!
எனக்கு மட்டும் எப்போதுமே: போரடிக்கிற வேலைதானு?


அதையடுத்து, தனித்து கிளம்பி விட்டார் லாரன்ஸ்...
அதோ... அந்த விமானம் தான்! அதை ஒட்டியே பறந்து செல்ல வேண்டும்!


லாரன்ஸின் நோக்கத்தைப் புரிந்து கொண்ட அயல் நாட்டுப் பிரதி நிதிகளிடையே திருப்தி நிலவியது ..
நம்முடைய பாதுகாப்பில் அமெரிக்க அரசு ரொம்பவும் தான் அக்கறை காட்டுகிறது!



ஆனால்...
ஹலோ... காலை சிற்றுண்டியா—மைடியர்?
இல்லை...! இது—
மின்னல் வேகத்தில், மற்ற விமான சிப்பந்திகளும் கையில் துப்பாக்கியுடன் பிரயாணிகளிருந்த பகுதிக்குள் பிரவேசித்தனர்—
கைகளை மேலே தூக்குங்கள்—இசகு பிசகாக ஏதேனும் செய்தீர்களானால் விளைவு விபரீதமாக இருக்கும்— ஜாக்கிரதை!



சுலபமாக முடிந்து விட்டது...! அடுத்து—?
கண் காணிப்பாக கூடவே பறந்து வரும் அந்த ஜெட்—யுத்த விமானத்தை ஒழித்துக்-கட்டவேண்டும்!




இயந்திர துப்பாக்கி ஒன்று, இயங்கத் தயாரானது...


வானில் நாலா திசைகளிலும் நோட்ட மிட்ட
வாறு, மிகவும் விழிப்புடனிருந்த போதிலும்,
கொஞ்சமும் எதிர்பாராத இலக்கிலிருந்து
விபரீதம் முளைத்தபோது, லாரன்ஸினால்
அதை தவிர்த்துக் கொள்ள முடியாமல்
போயிற்று..


தாக்குதலுக்கு இலக்கான
அவருடைய விமானம், நிலை
குலைந்து சரிந்தது...



பிரதிநிதிகளிருந்த விமானத்தின் காப்டன் குரூரமாக புன்னகை செய்தான்...
முதல் கட்டம்— முழு வெற்றி! அடுத்து திட்டத்தின் இரண்டாவது கட்டத்தை செயல் படுத்த வேண்டும்!




மீண்டும் பயணிகளிடம் வந்தான் அ. கொ. தீ. கழக ஆசாமி...
இந்த லைஃப்— பெல்ட்டையும் பார சூட்டையும் கட்டிக் கொண்டு வெளியேறும் வாசற்கதவு அருகே சேர்ந்து நில்லுங்கள்.


விமானம் பறந்து கொண்டிருந்த உயரத்தை தேவையான அளவுக்கு குறைத்துக் கொண்ட பின்... கதவுகள் திறக்கப்பட்டன...
ம்... நீ முதலில் குதி!
ஊஹும்—மாட்டேன்...
குதிக்கிருயா... இல்லே— சுட்டுக் கொல்லவா?




நேர் கீழே, கடல் நீரினுள்ளி
ருந்து வெளியே தலை நீட்டியது...
ஒரு பிரம்மாண்டமான சப்—மரீன்...
அவர்களை சேகரிக்க தயாராக இருங்கள்!


கடலில்
இறங்கிய பிரதி
நிதிகள், சப்மரீனுக்கு
கொண்டு வரப்-
பட்டனர்...


விமான காப்டன் சப் மரீனுக்கு வந்து சேர்ந்தபோது, கப்பல் சிப்பந்தி ஒருவன் சொன்ன சேதியை கேட்டு, வியப்படைந்தான்...
நீங்கள் சுட்டு வீழ்த்திய ஜெட்— விமானத்தின் பைலட் அதோ—! எஜக்டர்— ஸீட்டை இயக்கி, கடைசி தருணத்தில் இவன் வெளியேறியிருக்கவேண்டும்!
லாரன்ஸ்...!
திட்டப்படி வெற்றி ஈட்டப்பட்டு விட்டதோடு, போனஸாக நம் பரம எதிரியையும் கைப்பற்றி விட்டோம்...!


பிரதிநிதிகள் பயணம் செய்த விமானம், சீராக பறந்து வந்தது...
XKK70— விமானத்திற்கு அழைப்பு... பதில் சொல்லுங்கள்— ப்ளீஸ்...! பதில் சொல்லுங்கள்...!
அட... அநியாயமே— ரன் வேயை விட்டு விலகி, தாழ இறங்கி வருகிருனே...!


உள்ளே— யாரையும் காணோம்!
EMERGENCY SERVICE


பயங்கர அதிசயம்...— பயணிகளை காண-வில்லை...! விமான சிப்பந்திகளும் ஒருவருமில்லை!
லாரன்ஸுக்கு என்ன வாயிற்றோ— தெரியவில்லையே...!


தரையிறங்கிய விமானத்-
தினுள் சென்று
ஆராய்ந்தார்
டேவிட்—
ஓட்டுநர் யாருமின்றி விமானம் தானுக பறந்து வந்து சேருவது இதுவரை யாருமே கேட்டறியாத விசித்திரம்...!
இதில் ஆச்சரியப்பட ஏதுமில்லே! ஆட்டோ— பைலட் விசையை இயக்கி சீரான உயரத்தில் பறக்கச் செய்திருக்கிருர்கள்... எரி பொருள் தீர்ந்ததும் விமானம் தரையிறங்கி விட்டிருக்கிறது...!


விளங்காத புதிர் என்ன வென்ருல் – பயணிகளுக்கு என்ன நேரிட்டது...? ஏன்... லாரன்ஸினுல் விபரீதத்தை தடுத்து, முறியடிக்க முடியாமல் போயிற்று?


பின்னர்... ஐ. நா. தலைமை-யகத்தில்—
லாரன்ஸ் காணாமல் போய்விட்டதாகவும், ஒருவேளை கொல்லப்-பட்டிருக்கலாம் என்றும் பதிவு செய்திருக்கிறோம். இனி, நீ தனியொரு நபராக செயலில் இறங்க வேண்டும்—டேவிட்!


அமெரிக்க எல்லைக்கு உள்ளேயோ அல்லது அருகிலேயேதான் பிரதிநிதிகள்... காணாமல் போயிருக்கிறார்கள் இந்த விஷயம் பெரும் போர் மூழ காரண-மாகி விடலாம்! அவர்களை நீ தான் கண்டு பிடித்து, உயிருடன் மீட்க வேண்டும், டேவிட்! பன்னிரண்டு மணி நேர அவகாசம்தான் உனக்கு தரப்படுகிறது!


எங்கே— எப்படி, என்பதை பற்றி விளக்கம் தர எந்த குறிப்பும் இல்லை— வைக்கோல் போரில் ஊசியை தேடிய கதைதான்...!
சிலமணி நேரத்திற்குப் பின் கண்களை திறந்-தார் லாரன்ஸ்- குரூர-மாக சிரித்துக் கொண்டிருந்த ஒரு முகம், எதிரே தென்பட்டது...
லாரன்ஸ்...! ஒரு வழியாக, அ. கொ. தீ. கழகத்தினரிடம் வகை யாக சிக்கிக் கொண்டு விட்டாய்... நீ!



அ, கொ. தீ.— கழகத்தின் பிரதான தலைமையகத்தை நோக்கி, பஸிபிக் கடலில் ஒரு சப் மரீனில், போய்க் கொண்டிருக்கிறோம்... நாம். நம்மோடு கம்யூனிஸ்ட் நாடுகளை சார்ந்த பிரதிநிதிகளும் இருக்கிறார்கள். இவர்கள் காணாமல் போனதால் உலக சமாதான கருத்தரங்கு நடை பெறப் போவதில்லை...!
WAM 7




ஆனால் அதைப்பற்றியெல்லாம் இனி நீ அலட்டிக் கொள்ள, அவசியமே இராது! அ. கொ. தீ. கழக தலைமையகத்தில் விசாரணை நடத்தி, உன்னிடமிருந்து இரகியங்களையெல்லாம் கறந்து கொண்டபின், உன் கதையை முடித்து விடுவோம்


டேவிட்டுக்குநிலவரத்தை தெரியப்படுத்த மட்டும் முடியுமேயானல்...... ஹும்—என் டிரான்ஸ்-மிட்டர் நீரினடியிலிருக்கும் போது இயங்காது......!


நீர் மட்டத்துக்கு எழும்பி விட்டோம் —மேலே தளத்-துக்கு வந்து சற்று நேரம் சுத்தமான காற்றை சுவாசித்-தாயானல், விசார-ணைக்கு தேவை-யான தெளிவு உன்னிடம் ஏற்படும்!



மேலே தளத்துக்கு வந்து சேர்ந்த பின்—
சும்மா... தெரிந்து கொள்ளலாமே என்று கேட்கிறேன்—இப்போது நாம் எங்கே இருக்கிறோம்?
WAM 7
அதை நீ தெரிந்து கொள்வதால் ஒன்றும் மோசமாகி விடாதுதான்— மிட்வே தீவிலிருந்து, வடகிழக்கில் சுமார் நூறு மைல் தொலைவில் இருக்கிறோம்!



உரையாடலின் போது லாரன்ஸ் தன் கைக்கடிகாரத்தை, வெளியே தெரியும்படியாக வைத்துக் கொண்டார்...?
அ.கொ.தீ. கழகத்தின் பிரதான தலைமையகம் எங்கே இருக்கிறது...?
ம்...அதற்கென்ன அவசரம்— பொறுத்திருந்து, நீயாகவே தெரிந்து கொள்ளேன்!
185



துப்பாக்கி குழல் லாரன்ஸின் முதுகில் அழுத்தியது......
சுத்தமான காற்றை சுவாசித்தது போதும்— வா... போகலாம்! மீண்டும் வெளிஉலகை காணும் வாய்ப்பு உனக்கு கிடைக்குமா என்பது சந்தேகம்தான்!
லாரன்ஸின் நெஞ்சில் நம்பிக்கை துளிர்விட்டது......
என் டிரான்ஸ்மிட்டர் அனுப்பிய செய்தியை டேவிட் கேட்க முடிந்திருந்தால், நாங்கள் இப்போது இருக்குமிடத்தை தெரிந்து கொண்டிருப்பான்... ஆனால் நீரினடியில் விரைந்து கொண்டிருக்கும் சப்மரீனை தாமதமின்றி கண்டுபிடித்து வந்துசேர டேவிட்டால் முடியுமா என்பதுதான் சந்தேகம்!
186


விலகி, அப்பால் செல்லுங்கள்... நாட்டின் பாது-காப்பு சம்பந்-தப்பட்ட பிரச்னை— அவசரமாக செல்ல வேண்டும்!
